விலை: 60.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12 + 12

# வலம்புரி

## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 140 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 25 ஞாயிற்றுக்கிழமை (08.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



## இடைக்கால அரசுக்கு சஜித் அணியினர் இணக்கம்

(கொழும்பு)

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான ஆதரவை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம் எடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவ்வணியின் பாராளுமன்ற உறுப்பினர்ஹரின்பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி நாட்டில் தற்போது நிலவும் பாரதூரமான தேசிய நெருக்கடிக்கு தீர்வு காண 12

### சிங்கள மக்களே அவதானமாக இருங்கள்

## அவசரகாலச் சட்டம் உங்கள் மீது மனிதப் பேரவலத்தை கட்டவிழ்த்து விடலாம்

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கரணவாய்)

சிங்கள மக்கள், சிங்கள இளைஞர்கள், சிங்கள யுவதிகள் நீங்கள் அவதானமாக இருங்கள். உங்கள் மீது மனிதப் பேரவலத்தை கட்டவிழ்த்து விடுகிறதாகவே இந்த அவசரகால தடைச்சட்டத்தை நாங்கள் கருதுகிறோம் என தமிழ்த் தேசிய 11

### நானே பதவியிலிருப்பேன்

# விரட்டவும் முடியாது மிரட்டவும் முடியாது

### கடும் தொனியில் ஜனாதிபதி கோட்டா



*(கொழும்பு)* நான் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதி. எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளேன். இந்நிலையில் நடைமுறையிலுள்ள இந்தச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு எவரும் எனக்கு அழுத்தம் கொடுக்க முடியாது; என்னை மிரட்டவும் முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடும் தொனியில் தெரிவித்துள்ளார். *(11ஆம் பக்கம் பார்க்க)*

## அனைத்து பாதுகாப்பு படையினரதும் விடுமுறைகள் இரத்து

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து பாதுகாப்பு படையினரினதும் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் அவசரகாலச் சட்டம் 11


## அவசரகாலச் சட்டம் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அவசரகாலச் சட்டம் நிச்சயமாக உதவாது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தெற்காசியாவின் பழமையான ஜனநாயக நாட்டில் இலங்கைப் பிரஜைகள் கருத்துச்சுதந்திரத்துக்கான 11

## அவசரகாலச் சட்டம் ஐ.நா கண்டனம்


Hanaa Singer-Hamdy
@SingerHanaa
Limitations to the exercise of fundamental rights and freedoms are only acceptable when exceptional, proportional and justified. But Peaceful expression of dissent is not an emergency.Root causes for dissent must be tackled
12:36 PM · May 7, 2022

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப் படுத்த இது அவசரகால நிலைமையல்ல என 11

# 3 மாதங்களில் உணவுக்கு தட்டுப்பாடு

### எரிபொருட்களும் முடிந்துவிடும்

### உதய கம்மன்பில எச்சரிக்கை



*(கொழும்பு)*

அடுத்த மூன்று மாதங்களில் இலங்கையில் உணவு மற்றும் எரிபொருள் கையிருப்பு முடிந்துவிடும் ஆபத்து இருப்பதாக முன்னாள் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில எச்சரித்துள்ளார். *(04ஆம் பக்கம் பார்க்க)*

## சஜித் முன்வராவிடின் நாம் பொறுப்பேற்போம்

### அரசிலிருந்து விலகிய சுயேட்சைக் குழு எம்.பிக்கள்

(கொழும்பு)

பிரதமர் மற்றும் அமைச்சரவை இராஜினாமா செய்த பின்னர் ஆட்சி அமைக்க ஐக்கிய மக்கள் சக்தி முன்வராவிட்டால் இடைக்கால அர 11

### கிளிநொச்சியில்

## ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வாநகர் ஐயப்பன் கோவில் மண்டபத்தில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் கிளி 11

## பணிப்புறக்கணிப்பு வாரம் பிரகடனம்

### 11ஆம் திகதி தொழிற்சங்க மாநாடும் நடைபெறவுள்ளது

(கொழும்பு)

நாட்டு மக்கள் கோரும் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு நாட்டின் உழைக்கும் வர்க்கம் தயாராகி வருவதாகவும் மே 6ஆம் திகதி முதல் மே 13ஆம் திகதி வரை போராட்ட வாரமாக தொழிற்சங்கங்கள்.அறிவித்து, மே 11ஆம் திகதி தொழிற்சங்க மாநாடு நடைபெறவுள்ளது என தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் நேற்று அறிவித்துள்ளது.

மக்களின் போராட்டங்களை ஒடுக்குவதற்காகவே அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியதாக தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையத்தின் இணை அழைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மே 17ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது தொழிற்சங்கங்களும் பொதுமக்களும் அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்குமாறு 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்

பருத்தித்துறை

## 5ஆம் தரம் புலமைப்பரிசில் பரீட்சை-2021

## மாணவர் கௌரவிப்பு நிகழ்வு - 08.05.2022



சு.துஷான் (174) | ஸ்.ஷைனுகா (164) | ச.திபிகன் (162) | ஏ.கீர்த்திகன் (159) | வ.சாத்வீகா (159) | சே.திலக்ஷி (151) | ரோ.அபியாஸ் (148)



தே.ஹரிஷ்ராஜ் (145) | கோ.கிஷான் (143) | த.சர்மிகா (143) | வி.நேத்ரா (142) | கோ.சயங்கினி (141) | ஶ்ரீ.புவிராஜ் (141) | தி.கேதுசன் (139) | க.பிருந்தி (139) | அ.ரிஷாந் (138) | சு.விஜித் (138)



ம.கானுஜன் (134) | நி.ஹரிஸ்கேசவ் (133) | கா.அக்ஷயா (131) | ஜெ.ஜென்சியா (128) | பி.யனோசன் (128) | ஜெ.கம்ஷிகா (125) | ந.ஹிரித்திகன் (121) | ச.அபிநயா (121) | ர.அகர்ஷனன் (120) | ஜெ.தர்சிகா (116)




ச.அனுஷ்கா (115) | நி.கோவேந்தன் (115) | ஜெ.கம்சிகா (114) | பி.ரசானிகா (114) | ர.சானுஜன் (113) | கி.டிலக்ஷனா (111) | ரா.கௌசிகா (110) | ம.ஹரினி (106) | சி.திசான் (106) | ர.அனேஜினி (99)



இ.கிரிஷாந் (98) | கோ.சந்தோஷ் (82) | ரா.ராம்சரன் (82) | ஜெ.அக்ஷிகா (82) | க.அபிரதன் (82) | வி.துசாந் (81) | க.அனுஸ்ரிகன் (79) | யோ.கபிலன் (76)

வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற **07** மாணவர்களோடு **100** புள்ளிகளுக்கு மேல் பெற்ற **29** மாணவர்களையும் **70** இற்கும் **100** இற்கும் இடையில் புள்ளிகளைப் பெற்ற **10** மாணவர்களையும் வழி நடாத்திய பாடசாலை முன்னாள் அதிபர் **ந.தேவராஜா** இந்நாள் அதிபர் **ம.ரகுதீபன்** மற்றும் அவர்களுக்குப் போதித்த ஆசிரிய பெருந்தகைகளையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களை வழி நடாத்திய பெற்றோர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துவோர் :- பாடசாலைச் சமூகம்

(11306)

# நினைவஞ்சலி

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு.

**வல்லிபுரம் சிவயோகநாதன்**

( ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் -
தேசிய வீடமைப்புத் திணைக்களம், சமாதான நீதவான் )

மலர்வு 21.02.1942 உதிர்வு 24.09.2017

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி.

**சிவயோகநாதன்**
**நோனாம்பிகை**

மலர்வு 05.12.1945 உதிர்வு 09.05.2021

அன்பின் திருவுருவங்களாய், பாசத்தின் பிறப்பிடங்களாய்
பண்பின் உறைவிடங்களாய், வாழ்வின் வழிகாட்டிகளாய் வாழ்ந்து

எம்மைத் தரணியிலே தலைநிமிர்ந்து மனமகிழ்ச்சியாய்
வாழ வைத்ததுடன் சமூகத்திற்கும் பல நன்மைகள் செய்து

எங்களுக்கும் சமூகத்திற்கும் உங்கள் கடமைகள் முடிந்துவிட்டதென்று
எங்களைத் துன்பக்கடலில் தவிக்கவிட்டு ஒருவர் பின் ஒருவராய்
கருத்தொருமித்த ஒற்றுமையான தம்பதிகளாய் சென்றுவிட்டீர்களே!

நீங்கள் எம்மைத் துன்பக்கடலில் தவிக்கவிட்டுச் சென்றாலும்
உங்களுடைய வாழ்வியல் தத்துவத்தின் படியே
நாம் வாழ்ந்து உங்களின் சந்ததி என்பதனை நிரூபித்துக் கொண்டிருக்கின்றோம்

**08.05.2022 இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னார்களின் இல்லத்தில் நடைபெறும் நினைவுப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(9584)

எமது உயிர் உள்ளவரை உங்களின்
இனிய நினைவுகளுடன் வாழும்

**"நாகலிங்க வாசா"**
**தொலைபேசிப் பரிவர்த்தனை ஒழுங்கை,**
**மானிப்பாய் மேற்கு,**
**மானிப்பாய்.**

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 மாதங்களில்...

இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது கமத்தொழில், மருத்துவச் சேவை, கைத்தொழில் உற்பத்தி ஆகியன பாதிக்கப்படும் விதத்தில் மோசமான உச்சத்தை நோக்கி நெருங்கி வருவதாகவும் கம்மன்பில கூறியுள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் பிரதிபலன்கள் மோசமாக மாறக்கூடும். அடிப்படையாக தற்போது இலங்கையில் வெளிநாட்டு அந்நிய செலாவணிகள் எதுவும் இல்லை.

விரைவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து இருப்பதுடன் இலங்கை மூன்று மாதங்களுக்கு தேவையான எரிபொருளை இந்தியாவிடம் இருந்து 500 மில்லியன் கடனுதவியில் பெற்றுக்கொண்டது.

அதுவும் முடிவடைந்து விடும். அந்த எரிபொருளை தற்போது முழுமையாக பயன்படுத்தி வருகின்றனர். அனைத்து ரக எரிபொருளும் முடிந்து விடும் ஆபத்து காணப்படுகிறது.

அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லை என்பதால், அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இனிவரும் மாதங்களில் கட்டாயம் உணவுக்கு தட்டுப்பாடு ஏற்படும் எனவும் உதய கம்மன்பில சர்வதேச ஊடகத்திடம் கூறியுள்ளார். (ம-7)


## வேலை வாய்ப்புக்கள்

வட மாகாண மற்றும்
தென்பகுதி வேலை வாய்ப்பு
(Online, Part time
உட்பட)

விபரங்களிற்கு (11318)

dewmaswebs.com


## கண்ணீர் அஞ்சலி

எமது சக விரிவுரையாளர்
**திரு. கெ. சர்வேஸ்வரன்** அவர்களின்
பாசமிகு தாயார்



திருமதி
**கெங்காதரக் குருக்கள் விஜயலக்ஷ்மி**

அவர்கள் 06.05.2022 அன்று இறைபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா நிலையான பேரின்ப பெருவாழ்வு பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கணனி விஞ்ஞானத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.** (11316)


# சதுரங்கத்தில் ஆர்வமுள்ளவரா? நீங்கள்

GOOD SERVICE · GOOD FRIENDSHIP · MAINTAINS GOOD · AAA GRAND MASTER

**உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்**

சதுரங்கத்தை கற்றுக்கொள்வதனால் ஏற்படும் நன்மைகளை அறிந்து கொள்ளவும், சதுரங்க விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும்

## மாபெரும் கருத்தரங்கு

வடமாகாணத்தில் முதல் தரமிக்கதும், தனித்துவமிக்கதுமான சதுரங்க பயிற்சி நிலையமான **AAA Grand Master** சதுரங்க பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்பதிவுகள் கட்டாயமானது.

**முன்பதிவுகளுக்கு:**
**077 667 0108**
இலக்கத்திற்கு பிள்ளைகளின் முழுப்பெயர், வயது, இடம் என்பவற்றை S.M.S செய்யவும் அல்லது Miss Call மட்டும் செய்யவும்.

கருத்தரங்கு நடைபெறும் இடம், திகதி, நேரம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

4 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

(11319)

**"அறிவாளிகளின் ஆட்டம் சதுரங்க ஆட்டம்"**


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் முகாமையாளர்
**சதானந்தன் ஆனந்தராசா**
அவர்களின் தாயார்

திருமதி
**சதானந்தன் சிவபாக்கியம்**

அவர்கள் நேற்று (2022/05/07) காலமானதையிட்டு துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மீளாத்துயில் கொண்டு - எம்மை*
*ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே!*
*கலையாத நினைவுகளுடன்*
*உதிரும் எம் கண்ணீர் அஞ்சலி!*

(C-4301)

**உரிமையாளரும் ஊழியர்களும்,**
**கஜமுகன் கல்வியகம்**
**இல. 147,149, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 08 . 1951



மறைவு 05 . 05 . 2022

### திருமதி ஈஸ்வரபவானி சோமசுந்தரம்

கொக்குவில் சம்பியன் வீதியைச் சேர்ந்த திருமதி. ஈஸ்வரபவானி சோமசுந்தரம் கடந்த (05.05.2022) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி ஈஸ்வரபாதம் மற்றும் வசந்தரூபா ஈஸ்வரபாதம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு, அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், சிந்தியா சுரேஸ்குமாரின் (கனடா), பாசமிகு தாயாரும், ஜெகதீஸ்வரன் சுரேஸ்குமாரின் (கனடா) அன்பு மாமியாரும், கனடாவைச் சேர்ந்த அட்சயன், ஆராதனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ரூபரஞ்சினி (கனடா), ஈ. சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர் 2010 - 2020, உதயன் குழுமத் தலைவர்), ஸ்ரீரஞ்சினி (U.K), முகுந்தன் (U.K), ஸ்ரீதரன் (U.K), வசந்தினி (இந்தியா) கீதா (U.K) நவநீதன் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ச.பாலசுப்பிரமணியம் (கனடா), ச.யசோதை (உதயன் குழுமப் பணிப்பாளர்), ம.சக்திதாசன் (U.K), மு.விமலாதேவி (U.K), ஸ்ரீ.பிரேமினி (U.K), ந.ராஜேந்திரன் (இந்தியா) ரா.ஸ்ரீஸ்காந்தா (U.K), ந.சுகந்தினி (U.K) மற்றும் மேனகா, ஸ்ரீகுமார் (கனடா), காலஞ்சென்ற சி.பாலசுந்தரம், நந்தினி பிரேம்குமார், சாந்தினி குலதேவன், சி.சிவசுந்தரம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் இல.105, இராசவீதி கோப்பாயில் அமைந்துள்ள அன்னாரின் சகோதரனின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கலாசாலை வீதியில் அமைந்துள்ள திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**105, இராச வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.** (C-4302)

**தகவல்:**
**சிந்தியா சுரேஸ்குமார் (மகள்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அவசரகாலச் சட்டம் பிரகடனம்

# காரணங்களை மக்களுக்கு விளக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

நாடுமுழுவதும் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமை குறித்து கவலையடைவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. போராட்டங்கள் அமைதியாக நடைபெறுகிறது. பின் எதற்கு அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் கேள்வியெழுப்பியுள்ளது.

எனவே அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமைக்கான காரணங்களை பொது மக்களுக்கு விளக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. (நி-6)

# சிங்கப்பூர் பறந்தார் துமிந்த சில்வா

(கொழும்பு)

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் துமிந்த சில்வா சிங்கப்பூர் சென்றுள்ளதாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை 12.50 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூர் எயார்லைன்ஸ் விமானம் மூலம் சிங்கப்பூர் நோக்கிப் புறப்பட்டுள்ளார். (நி-6)

# 10 வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர். திருமதி.

## சிவரூபராணி (இந்திரா) செந்திவடிவேலு

(திதி : சப்தமி 08.05.2022)

மலர்வு : 06.04.1939 உதிர்வு 28.04.2012

அன்பின் உறைவிடமாய் எமை
அன்போடு அணைத்து
நாங்கள் எல்லோரும் நலமோடு வாழ அன்பு
மழை பொழிந்து எமை
வாழ வைத்த தெய்வமே
ஆண்டுகள் பத்து கடந்தாலும் உன் நாமம்
எந்நாளும் எம் நெஞ்சங்களை விட்டகலாது

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(11296)

'மாதர் வளவு'
மல்லி ஓடை ஒழுங்கை வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# இராசிபலன்

08.05.2022
சித்திரை 25, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி பிற்பகல் 2.08 மணிவரை

பூசம் பிற்பகல் 12.26 மணிவரை
சுபநேரம் 8.55-10.25 மணிவரை
இராகுகாலம் 4.25-5.55 மணிவரை

சர்வதேச அன்னையர் தினம்
சந்திராஷ்டமம்-பூராடம்

**வளவன்**

**மேஷம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மகரம்** உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் வாய்ப்புண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்** திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**விருச்சிகம்** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்** உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத மனக்கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**மீனம்** அரை குறையாக இருந்த பணிகளில் முன்னேற்றம் காணும் நாள், வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாமுண்டு.

ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவே விஞ்ஞானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருளுக்கு மீண்டும் வரிசை



(குப்பிழான்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக மீண்டும் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பெற்றோல் கொள்வனவுக்காக நேற்று முன்தினம் முதல் மக்கள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களில் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். (4-6-18)

# கடவுள் மங்கல நன்னீராட்டுவிழா

(குப்பிழான்)

சுதுமலை திருலிங்கேச்சரம் கயிலைநாதர் ஆலயத்தில் நந்தியெம்பெருமானுக்கு 'கடவுள் மங்கல நன்னீராட்டு விழா' இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.55 மணி முதல் 10.25 மணிவரையுள்ள சுப வேளையில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, கடவுள் மங்கல நன்னீராட்டு விழாவை ஒட்டிய எண்ணெய்க்காப்புச் சாத்தும் வைபவம் நேற்று சனிக்கிழமை இடம் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-6-18)

# பொலிஸ் காவலரண் திறந்து வைப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை காலை சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

வர்த்தக சங்கத் தலைவர் வே.சிவநிதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே மற்றும் யாழ் .மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித்த லியனகே ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு பொலிஸ் காவலரணை திறந்து வைத்தனர்.

மேலும் நிகழ்வில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன, சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் பாலமயூரன், வர்த்தக சங்க பிரதிநிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-6-30)

# பேராசிரியர் சிவலிங்கராஜாவின் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா எழுதிய 'யாழ்ப்பாணத்துக் கல்வி வளர்ச்சியில் இந்திய ஆசிரியர்களின் பங்களிப்பு' எனும் நூல் வெளியீடானது இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (4-6)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நூல் விமர்சகர் சிறீ சிறீஸ்கந்தராசாவின் 'தராசு முனைகள்' நூல் வெளியீட்டு விழா இன்று 8 ஆம் திகதி மாலை 3 மணிக்கு கொழும்புத்துறை சன சமூக நிலைய மண்டபத்தில் யாழ். இலக்கியக் குவியத்தின் அமைப்பாளர் வேலணையூர் தாஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது. (4-6)

---

(குப்பிழான்)

பா.இரகுவரன் எழுதிய தும்பளை மேற்கு சந்திரப்பரமானந்தர் வம்சம் சித்த ஆயுர்வேத வைத்தியம், சோதிடம், வானியல் நிபுணத்துவப் பரம்பரையினர் எனும் நூலின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணியளவில் பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்ற முதலாம் மாடி அரங்கில் இடம் பெறவுள்ளது.இந்த நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (4-6-18)

# பூசகரின் பணப்பையை பறித்து இளைஞர் தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை தட்டான்குளம் பிள்ளையார் ஆலயத்தின் பூசகரின் பணப்பையை பறித்துக் கொண்டு இளைஞர் ஒருவன் தப்பி ஓடியுள்ளார்.

மீசாலையில் உள்ள பிள்ளையார் ஆலயம் ஒன்றிற்கு நித்திய பூசையில் ஈடுபடும் பூசகர் மற்றுமோர் ஆலயத்திற்கும் தினப் பூசைக்காக சென்று வருவது வழமையாகும்.

இவ்வாறு பூசையில் ஈடுபடும் ஆலயத்தின் நாளாந்த வருமானமும் மாத வேதனமாக 25 ஆயிரத்தையும் தனது பையில் வைத்துக்கொண்டு மீசாலை பிள்ளையார் ஆலயத்திற்கு மோட்டார் சைக்கிளில் வருகை தந்து ஆலயத் திறப்பை எடுத்த சமயம் ஓர் இளைஞர் கைப்பையை பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடினார்.

இது தொடர்பில் பூசகர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (4-6-33)





கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான லயன் எஸ்.ரங்கநாதனால் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு 28 இலட்சம் ரூபா பெறுமதியான ஓட்டோ கிளேவ் இயந்திரங்கள் (Auto Clave Machine) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டன. (படம்- ரவிசாந்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 250 | 270 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 220 | 250 |
| தக்காளி | 350 | 350 | 340 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 120 | 80 |
| கோவா | 130 | 180 | 140 | 200 |
| கரட் | 160 | 200 | 220 | 250 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 180 | 150 | 140 | 160 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 320 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 500 | 450 | 400 |
| வெண்டக்காய் | 180 | 140 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 250 | 220 | 140 | 160 |
| லீக்ஸ் | 140 | 180 | 160 | 240 |
| பீற்றூட் | 160 | 200 | 180 | 300 |
| கறிமிளகாய் | 320 | 280 | 240 | 350 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 700 | 800 |
| போஞ்சி | 400 | 500 | 350 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 300 | 250 |
| கீரை - 1 பிடி | 130 | 100 | 150 | 120 |
| தேசிக்காய் | 600 | 400 | 450 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 55 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 240 | 180 | 150 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 120 | 80 | 280 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | --- | --- | 80 | — |

# சைகைமொழி தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு

(குப்பிழான்)

வடமாகாணச் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ILO நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் சைகை மொழி தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் வட மாகாணச் சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் செல்வி. செ.அகல்யா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில், சைகை மொழி தொடர்பான குறைபாடுகள் மற்றும் சவால்கள், நன்மைகள் தொடர்பாகவும், சைகை மொழிக் கல்வியில் தேசிய ரீதியில் காணப்படும் மாற்றங்கள், வளப்படுத்த வேண்டிய தேவைகள் தொடர்பாகவும் கூறினார்.

மேற்படி செயலமர்வில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் த.தனுஜா, விசேட கல்வி அலகின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விஷ்ணுகரன் மற்றும் குழுவினர், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முதியோர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (4-6-18)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சன சமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டம் ஊடாக கனடா வாழ் பாலராஜ் ஸ்ரேனாவின் பிறந்த நாளை முன்னிட்டுக் கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலய பாடசாலைக்கு இரண்டு அலுமாரிகள் [illegible] நன்கொடையாக கையளிக்கப்பட்டது. (படம்- ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரிக்கைகளுக்கு செவிமடுக்காது தொடர்ந்து அதிகாரத்தில் இருக்கும் அரசு

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கண்டனம்

(கொழும்பு)

இடைக்கால அரசாங்கத்திற்கு இடமளித்து அரசாங்கம் பதவி விலக வேண்டும் அல்லது அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இடைக்கால அரசாங்கத்திற்கு தயாராக இல்லை என்றால் பாராளுமன்ற தேர்தலுக்கு செல்ல வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



நேற்று சனிக்கிழமை தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் "மக்கள் தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் வழங்குகிறார்கள். மக்கள் கொடுக்கும் அதிகாரம் வாழ்நாள் முழுவதும் அல்ல தற்காலிகமானது என்பதை அவர்கள் உணர வேண்டும்,"

பௌத்த பிக்குகள், சிவில் சமூகம் மற்றும் பொது மக்களின் வலுவான வேண்டுகோளுக்கு செவிசாய்க்காமல் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# வீதியை மறித்து கொள்கலன்களுடன் ஆர்ப்பாட்டம்





(கொழும்பு)

கொழும்பு ஆமர் வீதியில் நேற்று எரிவாயு கொள்கலன்களுடன் வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (நி-6)

# அவசரகால சட்டம் பிரகடனம் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கையில் அவசரகால சட்டம் நடைமுறைப்படுத்தபட்டமை தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சுங் கவலை வெளியிட்டுள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் தெரிவிக்கையில்,

"மற்றொரு அவசர நிலை குறித்து அமெரிக்கா கவலையடைந்துள்ளது. அமைதியான குடிமக்களின் குரல்க்ள் கேட்கப்பட வேண்டும்.

இலங்கையர்கள் எதிர்கொள்ளும் உண்மையான சவால்களுக்கு நாட்டை மீண்டும் செழிப்புக்கான பாதையில் கொண்டு வர நீண்ட கால தீர்வுகள் தேவை. அவசர நிலை அதற்கு உதவாது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# எரிபொருளின் தரம் குறித்து சோதனை மீறினால் உரிமம் இரத்து

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் எரிபொருளின் தரம் குறித்து சோதனைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆரம்பித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலைய்ங்கள் வழிகாட்டுதல்களை மீறினால் உரிமம் இரத்து செய்யப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருளின் தரம் மற்றும் பெற்றோலிய பொருட்களை கலப்பது குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-6)

# சர்வதேச நாணய நிதிய குழு-இலங்கை இணைய வழியில் பேச்சு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியக் குழு, இலங்கை குழுவுடன் நாளை 9 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை இணையவழி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இலங்கை தொடர்பான தமது புதுப்பிக்கப்பட்ட அறிவித்தலை வெளியிட்டு, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை பிரதானி மசாயிரோ நொஸாகி இதனை அறிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், தமது கொள்கை எல்லைக்குள், இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# மக்களின் போராட்டங்களை திசை திருப்ப அரசு திட்டம்

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக இடம்பெறும் மக்கள் போராட்டங்களை நசுக்குவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இதனால் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள அவசரகாலச் சட்டத்தை மீளப்பெறுமாறு கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா வலியுறுத்தியுள்ளார்.

மக்களின் குரலை நசுக்கி, ஆட்சியில் தொடர்ந்தும் நீடிப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக தெரிவித்த அவர், அதனைக் கைவிட்டு மக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும்.

இலங்கை மக்கள் அனைவரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரும் நிலையில், பிரதமரை பதவி விலக சொல்வதற்கு பதிலாக தாம் முதலில் பதவி விலக வேண்டும்.

அதன் பின்னர் பிரதமரும், அமைச்சரவையும் பதவி விலக வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 21 ½ சூரி 2 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.com S.L.T.C<br>எதிர்பார்ப்பு:அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12605 | பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: மிருக சீரிடம்<br>கி.பா: சூரி 4 செவ் 11 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc,Engineer (தனியார்)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/12633 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம் : பூசம் 3<br>கி.பா: 31 சூரி 1 செவ் 4 இல் உயரம்:6'9"<br>தகைமை/தொழில்: BSc in IT டயலொக் உதவிமுகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12608 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: சூரி 6 செவ் 11 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்:HNDA Health Management Assistant<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு கனடா மட்டும்<br>தொ.இ:G/12636 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: சூரி 3 செவ் 7 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்:Nursing அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12609 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: சூரி 11 செவ் 12 இல்<br>உயரம்: 152 cm<br>தகைமை/தொழில்: Civil Engineering (அரச)<br>எதிர்பார்ப்பு: தகுந்த அரச,தனியார் உத்தியோகம் (Civil Engineer விரும்பத்தக்கது)<br>தொ.இ:G/12637 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: சூரி , செவ் 12 இல் உயரம்:6'<br>தகைமை/தொழில்:BAHonesMulti MediaManagement போர்த்துக்கல்<br>எதிர்பார்ப்பு: படித்தமணமகள்<br>தொ.இ: B/12612 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம்*4<br>கி.பா: 38 சூரி 12 செவ் 7 இல்<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில் :MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/12644 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணையின் சக்தியை நம்புங்கள்

## — இன்று சர்வதேச செஞ்சிலுவை தினம் —



சர்வதேச செஞ்சிலுவை தினம் ஆண்டு தோறும் மே மாதம் - 8 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அவ்வகையில் செங்சிலு வைச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கிய சுவிஸ் நாட்டினைச் சேர்ந்த ஜீன் கென்றி றொனாட் அவர்களின் பிறந்த தினமாகிய மே மாதம் 8 ஆம் திகதியினை அடிப்படையாகக் கொண்டு இத் தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஜீன் கென்றி றொனாட் அவர்கள் தனது வியாபார நோக்கம் கருதி சொல்பரினா என்ற தேசத்தில் இரு நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட போரினால் காயமடைந்து குற்றுயிராகக் கிடந்த போர்வீரர்களையும் பொதுமக்களையும் தனது கண்முன் கண்ட பொழுது இதிலிருந்து போர் வீரர்களையும் மக்களையும் உடனடியாக மருத்துவ உதவி அளித்து காப்பாற்ற வேண்டும் என்ற மனிதநேய பணியினை முன்னெடுக்கும் வகையில் 1863 ஆம் ஆண்டு உருவானதே செஞ்சிலுவை சங்கம் ஆகும். இவரது கோட்பாட்டின் அடிப்படையில் மோதல் வன்முறை அனர்த்தம் என்பவற்றில் இருந்து பாதிப்படைந்த மக்களுக்கு தொண்டர்களை அணி திரட்டி சேவை செய்யும் மிக உன்னதமான பணியினை இவர் ஆரம்பித்து வைத்தார்.

தொண்டர்களை செஞ்சிலுவை சங்கத்தில் இணைத்து சேவை செய்வதற்காக 1864 ஆம் ஆண்டுபல்வேறுஅமைப்புகளையும் இராஜதந்திரிகளையும் இணைத்து முதலாவது ஜெனிவா சாசனத்தினை உருவாக்கினார் ஜீன் கென்றி றொனாட். இது பின்னர் சர்வதேசத்தின் அங்கீகாரம் பெற்ற அமைப்பாக செஞ்சிலுவை சங்கம் உதயமானது. கென்றி றொனாட் தனது நாடாகிய சுவிட்சர்லாந்து நாட்டு தேசிய கொடியின் சின்னமாகிய சிவப்பு நிற பின்னணியில் வெள்ளை சிலுவையை மாற்றியமைத்து வெள்ளை நிற பின்னணியில் சிகப்பு நிற சின்னத்தை அமைத்து உருவாக்கியதே செஞ்சிலுவை கொடியாகும். இது பிற்காலத்தில் செம்பிறையையும் தனது சின்னமாக ஏற்றுக்கொண்டது.

மனிதநேய அடிப்படையிலான மனிதாபிமானம், பாரபட்சம் இன்மை, நடுநிலைமை, சுயாதீனம், ஒருமைப்பாடு, தொண்டர் சேவை, சர்வதேச மயம் என ஏழு கொள்கைகளை தன்னகத்தே கொண்டு செயற்படும் ஓர் மனிதநேய அமைப்பாகும்.

செஞ்சிலுவை சங்கம் 3 வகையான பிரிவுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அவையாவன,

- சர்வதேச செஞ்சிலுவை சங்கம்
- சர்வதேச செஞ்சிலுவை சங்கங்களின் சம்மேளனம்
- தேசிய செஞ்சிலுவை சங்கங்கள்.

### சர்வதேச செஞ்சிலுவை சங்கம்

சுவிட்சர்லாந்து நாட்டினை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இவ் அமைப்பு தனது செயற்பாட்டை யுத்தம், உள்நாட்டு கலவரங்கள் மற்றும் அனர்த்தம் என்பவற்றால் பாதிக்கப்படும் மக்களுக்கு சேவை ஆற்றி வருகின்றது. அத்துடன் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் போர் நடைபெறும் காலங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நியமங்கள் என்பவற்றை வலியுறுத்தும் ஓர் அமைப்பாகும். அத்துடன் காலநிலை மாற்றத்தினால் அடிக்கடி ஏற்படும் அனர்த்தங்களை மையப்படுத்தி சேவை செய்யும் ஓர் அமைப்பாகும்.

### சர்வதேச செஞ்சிலுவை சங்கங்களின் சம்மேளனம்

உலகில் உள்ள 197 நாடுகளின் அங்கத்துவத்தை உள்ளடக்கி உருவாக்கப்பட்டதே சர்வதேச செஞ்சிலுவை சங்கங்களின் சம்மேளனம் ஆகும். இவ் அமைப்பு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேசிய சங்கம் ஊடாக நிவாரணங்கள் வழங்கல் மற்றும் தேசிய சங்கங்களின் இயலளவு ஆற்றலை விருத்தி செய்தல் என்பவற்றுடன் அனர்த்தங்களுக்கு பதிலிறுத்தல், அனர்த்த முன்னாயத்தம், சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு போன்றவற்றை ஒன்றிணைத்து செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் ஓர் அமைப்பாகும்.

### தேசியசங்கங்கள்

ஒவ்வொரு நாடும் தனக்கென உருவாக்கிய சங்கமே தேசிய சங்கங்களாகும். அவ்வகையில் இலங்கையில் இலங்கை செஞ்சிலுவை சங்கம் 1936 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றதாகும். இச் சங்கம் ஏனைய தேசியசங்கங்கள் போல் அனர்த்தங்களுக்கு பதிலிறுப்பு நடவடிக்கை மேற்கொள்ளல், முதலுதவி, அடிப்படை சுகாதார வசதிகள் மற்றும் உணவல்லாத பொருட்கள் வழங்கல் என்பவற்றுடன் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளல் போன்ற சேவைகளை நாட்டில் ஆற்றி வருகின்றது.

அவ் வகையில் சர்வதேச செஞ்சிலுவை தினம் 2022 ஆம் ஆண்டுக்குரிய தொனிப் பொருளாக "கருணையின் சக்தியை நம்புங்கள்" "Believe in the Power of Kindness" ஆகும்.

இக் கருப்பொருளினை அடிப்படையாக வைத்து இத்தினத்தில் செஞ்சிலுவை சங்க தொண்டர்கள் சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் போன்ற மையங்களில் செயற்பாடுகள் மேற்கொள்ளல் மற்றும் இரத்ததானம் வழங்கல், மருத்துவ மனைகளில் உள்ள நோயாளர்களுக்கு அன்பளிப்புக்கள் வழங்கல் போன்ற மனிதாபிமான செயற்பாடுகளை மாவட்ட ரீதியாக தொண்டர்கள் மேற்கொள்ள தயாராகி வருகின்றனர்.

எதிர்காலத்திலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைக்கு உடனடியாக நம்பிக்கை ஊட்டக்கூடிய செயற்பாடுகளை தொண்டர்களை அணி திரட்டி மேற்கொள்ளும் ஓர் மனிதநேய அமைப்பாக செஞ்சிலுவைச் சங்கம் விளங்குகின்றது என்றால் மிகையாகாது.

**த.சேதுபதி**
**தலைவர்**
**இலங்கை செஞ்சிலுவை சங்கம்**
**கிளிநொச்சி கிளை.**

# எதற்காக அவசரகாலநிலை பிரகடனம்?

## கனேடிய உயர்ஸ்தானிகர் கேள்வி



(ஒட்டாவா)

அமைதியாக போராட்டங்கள் நடக்கும் போது, அவசரகால நிலைப் பிரகடனம் ஏன் செய்யப்பட்டது என்பதை புரிந்து கொள்வது கடினமாக உள்ளது என கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னன் தெரிவித்தார்.

இலங்கையில் கடந்த வாரங்களாக அதிகளவிலான மக்கள் பங்காற்றுதலுடன் நாடு முழுவதும் அமைதியான போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

பின் எதற்காக அவசரகால நிலைப் பிரகடனம் செய்யப்படுகின்றது என்பதைப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது என அவர் தெரிவித்தார். (நி-6)

# ரணிலின் வீட்டுக்கு முன் மக்கள் ஆர்ப்பாட்டம்






(கொழும்பு)

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பர்ராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு முன்னால் நேற்று மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "கோ கோம் ரணில்" மற்றும் "ஸ்டே கோம் ரணில்" என கோஷம் எழுப்பினர். (நி-6)

# அவசர நிலையின் ஊடாக நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார்.

இந் நிலையில் அவசர நிலையின் ஊடாக நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காண முயல்வது சாத்தியமற்ற விடயமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்ட டுவிட்டர் பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அச்சம் மற்றும் வன்முறையின்றி இந்த சூழ்நிலைமை கையாளப்பட வேண்டுமெனவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறை யாருடையதாக இருந்தாலும்
பொறுப்பு நம்முடையது.
- ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க இந்தியா உதவ வேண்டும்

கந்தறுந்து க்காவடி எடுப்பதுதான் இலங்கையின் தலைவிதியென்றால் அதனைத் தடுக்கவும் தவிர்க்கவும் யாராலும் முடியாது.

ஆம், தென்னிலங்கையில் மக்கள் போராட்டம் இத்துணை தூரம் வியாபித்தும் அதுபற்றி ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தவில்லை எனில்,

அவர்களின் மனம் எத்துணை வக்கிரத் தன்மை கொண்டதென்பதை அனுமானிப்பதில் கடினமிருக்க முடியாது.

எதுஎவ்வாறாயினும் 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புக்குள் இருக்கக்கூடிய அரக்கத்தனத்தை சிங்கள மக்கள் அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதென்பதோடு, அந்த விடயம் ஒருபுறம் இருக்க,

இப்போது நம் தமிழர் தாயகப் பகுதியில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென்ற தகவல் இதயத்தை இறுக்கிக் கொள்கிறது.

ஆம், யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் பகிரங்கப்படுத்தியுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை என்பது வடபுலத்து மக்களின் உயிர்காக்கும் நிலையம்.

அங்கு அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கும் சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்துப் பொருட்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதெனில், அதன் அடுத்த கட்ட நிலைமை என்னவாக இருக்கும் என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இராது.

தவிர, மேற்குறித்த மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது அதனால் ஏழை மக்கள் கடும் பாதிப்பை எதிர்கொள்வர்.

ஆகையால் தேவையான மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழி வகைகளைக் கண்டறிவது அவசியமாகிறது.

அந்தவகையில் எமது மக்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களைத் தந்துதவுமாறு இந்தியத் துணைத் தூதரகத்தினூடாக இந்திய மத்திய அரசிடம் கோரிக்கை முன்வைக்க வேண்டும்.

இக்கோரிக்கையை முன்வைப்பதில் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்துக்குச் சட்டக்கட்டுப்பாடுகள் இருக்குமாயின், பொது அமைப்புகள் மற்றும் சமய நிறுவனங்கள் மேற்போந்த கோரிக்கையை முன்வைக்கலாம்.

அதேசமயம் யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்தியத் துணைத் தூதரகமும் இதுவிடயத்தில் தனது காத்திரமான வகிபங்கை விரைந்து ஆற்ற வேண்டும் என்பதும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

### இளைஞனை நிர்வாணமாக்கி ஒளிப்படம், காணொளி எடுத்து

# கப்பம் கேட்டு மிரட்டிய இளம் தம்பதி உள்ளிட்ட நால்வர் பொலிஸாரால் கைது

## யாழில் பரபரப்புச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இளைஞன் ஒருவரை நிர்வாணமாக ஒளிப்படம் மற்றும் காணொளி எடுத்து கப்பம் கேட்டு மிரட்டியதாக இளம் தம்பதி உள்ளிட்ட நால்வர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் செல்வபுரத்தைச் சேர்ந்த இளம் கணவன், மனைவி மற்றும் அவரது சகோதரர்கள் இருவரே நேற்றைய தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சந்தேக நபர்கள் முகநூல் போலிக் கணக்கின் ஊடாக பெண் ஒருவர் போன்று சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞருடன் நட்பாகியுள்ளனர்.

பின்னர் இளைஞனை கோப்பாய்க்கு அழைத்து தமது வீட்டில் அறையில் பூட்டி வைத்து நிர்வாணமாக்கி சித்திரவதை செய்ததுடன், ஒளிப்படம் மற்றும் காணொளிப் பதிவை மேற்கொண்டுள்ளனர்.

பின்னர் குறித்த ஒளிப்படம் மற்றும் காணொளியை முகநூலில் பதிவேற்றப்போவதாக அச்சுறுத்தி இளைஞனிடம் 2 லட்சம் ரூபாய் பணத்தை கோரியுள்ளனர். அச்சமடைந்த இளைஞன் வங்கிக் கணக்கில் அந்தப் பணத்தை கடந்த வாரம் வைப்பிலிட்டுள்ளார்.

இந்த நிலையில் மீளவும் இந்த வாரம் அந்த ஒளிப்படங்கள் மற்றும் காணொளியை பதிவேற்றப் போவதாக மிரட்டி இளைஞனிடம் 5 லட்சம் ரூபாய் கோரியுள்ளனர். அதனால் அச்சமடைந்த இளைஞன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அதனை விசாரித்த பொலிஸார் இளம் தம்பதி உள்ளிட்ட நால்வரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான இளம் குடும்பத்தலைவர் இராணுவத்தின் வேலைப் பகுதியில் இணைந்து பணியாற்றி விலகியவர் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

(ம-7,33,104)

# ஜனாதிபதி கோட்டாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும், அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கட்சி கூடி தீர்மானம் எடுக்க வேண்டும் என கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அதற்குப் பின்னர் என்ன நடக்கும் என்பது தொடர்பிலான விளக்கம் தமக்கு வழங்கப்பட்ட பின்னரே அது தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியும் என அவர் கூறினார். (ம-7)

## அம்பாந்தோட்டை சீமெந்து தொழிற்சாலையில் தீப்பரவல்

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை துறைமுகம் அருகில் உள்ள சீமெந்து தொழிற்சாலை கட்டடத்தில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர 2 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மின்கசிவே தீப்பரவலுக்கு காரணம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கொரோனா தொற்றால் மேலும் ஒருவர் மரணம்


(கொழும்பு)

நாட்டில் மேலும் ஒருவர் கொரோனா தொற்றால் மரணித்துள்ளார். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் இந்த மரணம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16,509 ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

## எதிர்ப்பு இல்லாமல் இறைபணி சாத்தியமாகுமா?



உலகத்தின் எந்த இடத்திலும் இயேசுவின் போதனைகளுக்கு எதிர்ப்பு இல்லை. மக்களை நல்வழிப்படுத்தும் வார்த்தைகள் அவை என்பதை எல்லாருமே அறிவர். ஆனால் இயேசுவின் போதனைகளை போதிக்கும் இறைபணியாளர்களை மட்டும் மக்கள் பலர் எதிர்க்கிறார்கள். .போதனை முறைகளில் காணப்படும் குறைகளே இதற்கு காரணமாக அமையக்கூடும்.

'உன் ஆகாரத்தை தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதன் பலனைக் காண்பாய்' (பிர.11:1) என்ற வசனத்தின் படி, இயேசுவை அறியாத மக்களிடம் அவரைப்பற்றிய வார்த்தைகளைக் கூறி விட்டு அகன்று விடலாம். அந்த வார்த்தையின் மூலம் ஒருவனைத்தொட்டு,தன்னிடம் இழுப்பதற்கு சரியான நேரத்தை இயேசு வைத்திருப்பார்.

ஆனால் விதை விதைத்த அன்றே மரம் முளைத்து விட வேண்டும் என்ற அவசர கோலத்தில் மேற்கொள்ளப்படும் நடைமுறைகளே இன்று பலரை அதிருப்தி அடைய வைத்துவிட்டன. ஆளை மாற்றுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுகிறது. ஒருவர் மனம் மாற நேரம் குறிப்பது மனிதர்களின் (இறைபணியாளர்கள்) கையில் இல்லை. இயேசுவால் அழைக்கப்பட்டு இறைப்பணிக்கு வந்தோமா? (1கொரி.7:17,20) (2 பேதுரு 1:10), (எ.பே.4:1), (எபி.4:4). அப்படியானால், அவர் எப்படிப்பட்ட பணிக்கு தன்னை அழைத்துள்ளார்? (எபே. 4:13). அதைத்தான் செய்கிறோமா? அதன் நோக்கம் என்ன? என்பதையெல்லாம் சிந்திக்க இது நல்ல தருணம். 2000 ஆண்டுகளுக்கு முன்பாக இயேசு தனது இறைப்பணியை ஆரம்பித்த காலத்திலிருந்தே எதிர்ப்பும் தொடங்கிவிட்டது.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியால் மேசன் தொழிலாளர்கள் பாதிப்பு

## கட்டுமானப் பணிகள் கைவிடப்படும் நிலையில்

(கொழும்பு)

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் மேசன் தொழிலாளர்கள் தமது தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.**



தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கட்டடப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தற்பொழுது சீமெந்தின் விலை 2700 தொடக்கம் 3000 ரூபாய் வரை விற்பனை செய்வதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கட்டுமானப் பணிக்குத் தேவையான இதர பொருட்களும் பல மடங்கு அதிகரித்த விலை காரணமாக தமது தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே ஒப்பந்தம் செய்து கொண்ட வேலைகளையும் நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கான பணத்தையும் தமது சொந்தப் பணத்திலேயே செய்து முடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஒரு நாள் கூலியாக 2000 ரூபா பணத்தையே பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அத்தொகையில் தமது குடும்ப வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக பல வேலைகள் இடைநடுவே கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும், விலை அதிகரித்ததன் காரணமாக பலரது கட்டுமானப் பணிகளை இடைநடுவே கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (4-6-316)

# சான்றுப் பொருட்களை பெற்றுக் கொள்ளவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் B/1310/2021, B/813/2021, B/316/2021, 49149, 47691, 30504, 31650, 48025, B/22/2021 ஆகிய இலக்கங்களை கொண்ட வழக்குகளில் உள்ள சான்றுப் பொருட்களான வாகனங்களின் உரிமையாளர்கள் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக் கொள்ளவும்.

அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து 2 மாதங்களின் பின் எதுவிதமான முன்னறிவித்தலும் இன்றி சான்றுப் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)



இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு விழாவும், பரிசில் வழங்கல் நிகழ்வும் அண்மையில் இணுவில் பொது நூலக மண்டபத்தில் இணுவில் பொது நூலகத் தலைவர் ந.ஶ்ரீ அரவிந்தன் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது. மேற்படி விழா நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவின் மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி ம.பிரதீபன், சுன்னாகம் பொது நூலகப் பிரதம நூலகர் திருமதி.சு.ஜெயலட்சுமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (படம் : ரவிசாந்)



புலம்பெயர் நாட்டில் வசிக்கும் கிளி பீப்பிள் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரான K.விஜயராஜா கிளிநொச்சி மாவட்டத்தில் அவ்வமைப்பின் ஊடாக பல்வேறு வாழ்வாதார உதவிகள் மற்றும் கற்றல் உதவிகள் என பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றார். இந்த நிலையில் அவரது பிறந்த நாளான நேற்று முன்தினம் வன்னேரிக்குளத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்களிற்கு புத்தாடைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், சிற்றுண்டிகளும், இரவு உணவும் வழங்கி வைக்கப்பட்டது. (படம் : சப்தசங்கரி)

# இந்தியா செல்ல முயன்ற 12 பேர் கைது

(மன்னார்)

மன்னாரில் இருந்து சட்டவிரோதமாக இந்தியாவிற்கு படகில் கைக் குழந்தையுடன் சென்ற குடும்பம் உட்பட 12 பேரை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று சனிக்கிழமை அதிகாலை கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 12 பேரும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி A.H.ஹைபதுல்லா முன்னிலையில் மதியம் ஆஜர்படுத்தப்பட்டனர்

வழக்கை விசாரித்த நீதிவான் நீதிமன்ற நீதிபதி A.H ஹைபதுல்லா இரு சிறுவர்களையும் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறும் ஏனைய 10 பேரையும் சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் சரீர பிணையில் செல்ல அனுமதித்தார். (6-4-285)



மன்னாரில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்தின் 36 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. (படம்- ஜோசப்நயன்)

# மரண அறிவித்தல்



## திருமதி. சிவபாக்கியம் சதானந்தம்

துன்னாலை தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சிவபாக்கியம் சதானந்தம் அவர்கள் நேற்று (07.05.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பத்தினிப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம் சின்னப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சதானந்தம் (முன்னாள் பூதேஸ்வர சிவன் கோயில் தர்மகர்த்தா) அவர்களின் பாசமிகு மனைவியும், சிவமலர், இராசமலர், சிவராஜா (திடீர் மரண விசாணை அதிகாரி, பருத்தித்துறை பிரதேசம்), யோகமலர், ஆனந்தராஜா (கஜமுகன் ஹாட்வெயார், யாழ்ப்பாணம்), கிருபைராஜா (பிரதேச சபை, உறுப்பினர் கரவெட்டி), நித்தியானந்தன் (ஆசிரியர் யா/விக்கினேஸ்வராக் கல்லூரி), கௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்கினராஜா, பவானி (ஆசிரியர்), மகேஸ்வரி (ஆசிரியர்), நிர்மலாதேவி, சந்திரகலா, புஸ்பராசா (இந்தியா) ஆகியோரின் மாமியாரும், அரவிந்தன், அஜந்தன், கோபிசங்கர், சிவசங்கர், கௌசி, தினேஸ், தனிஜிகா, கிருத்திகா, கஜானன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (08.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்று பிட்டிதூ இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

(C-4300)

தகவல் :-
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண் ஒருவரின்...

நொச்சியைச் சேர்ந்த லாலசிங்கம் சங்கர் (வயது-45) என்ற 2 பிள்ளைகளின் தந்தையான வர்த்தகர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த மரணம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,100,316)

## அவசரகால...

வும் அமைதியாக கருத்து வேறுபாடுகளை முன்வைப்பது அவசரகால நிலைமையாக கருத முடியாது எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட இணைப்பதிகாரி ஹனா சிங்கர் ஹெம்டி தெரிவித்துள்ளார்.

கருத்து வேறுபாடுகளுக்கான அடிப்படைக் காரணத்தை தீர்க்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பயன்படுத்துவதற்கான வரையறைகளை மீறி, விதிவிலக்கான மற்றும் நியாயப்படுத்தக்கூடிய வகையிலான நிகழ்வுகளின்போது நியாயப்படுத்தப்படும் போது மட்டுமே அவசரகால நிலைமை ஏற்றுக்கொள்ளப்படும்.

எனினும் அமைதியான முறையில் கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்துவது ஒரு அவசரகால நிலைமையல்ல. கருத்து வேறுபாடுகளுக்கான மூலகாரணங்களுக்கு தீர்வு காணவேண்டும் எனவும் ஹனா சிங்கர் ஹெம்டி வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில் கூறியுள்ளார். (ம-7)

## சஜித் முன்வரா...

சாங்கத்தை அமைக்கும் பொறுப்பை ஏற்க அரசாங்கத்தில் இருந்து விலகிய சுயேட்சைக் குழு எம்.பிக்கள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுப் பிற்பகல் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சுயேட்சைக் குழு ஒன்றுகூடி இவ்விடயம் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றும் பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டால், நாட்டை அராஜகமாக்க விடமாட்டோம் என்றும் மேலும் பல கட்சிகளுடன் இணைந்து இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவர்களால் உருவாக்கப்படும் தேசிய சபையில் இருந்து புதிய பிரதமரைத் தெரிவு செய்ய முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## அவசரகால...

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட அவர் அவசரகால தடைச் சட்டம் அவசர அவசரமாக பிரகடனப்படுத்தப்பட்டமை தொடர்பில் ஊடகங்களிற்கு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

இந்த அவசரகால தடைச் சட்டம் என்பது தமிழர்கள் பல்லாண்டுகளாக அனுபவித்த துன்பங்களை இப்போது சிங்கள மக்கள் அனுபவிக்க தலைப்பட்டிருக்கிறார்கள் என நாங்கள் மிக முக்கியமாக அஞ்சுகிறோம்.

பல சிங்கள இளைஞர்கள், சிங்கள யுவதிகள், சிங்கள மக்கள் காணாமல் ஆக்கப்படப்போகிறார்கள் அல்லது கொல்லப்படப் போகிறார்கள். இந்த நாட்டிலே பேர் அனர்த்தம் ஒன்று நடைபெறப்போகிறது என்பதற்கான கட்டியம் கூறுவதாக தென்படுவதாகவே நாங்கள் இதைப் பார்க்கிறோம்.

அவசரகாலச் சட்டமோ, ஊரடங்கு சட்டமோ தேவையில்லை. ஏனென்றால் இந்த நாட்டிலே இருக்கின்ற இளைஞர் யுவதிகள் ராஜபக்ஷ குடும்பம் வெளியேற வேண்டும். இவர்கள் இந்த நாட்டினுடைய பணத்தை கொள்ளை அடித்ததை வெளிப்படுத்த வேண்டும், அவர்கள் வெளியேற வேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் இந்த ஜனநாயகப் போராட்டத்தை மேற்கொண்டு உள்ளார்கள்.

இந்த ஜனநாயக வழிப் போராட்டத்தை மழுங்கடித்து அந்த இளைஞர் யுவதிகளை கொல்கின்ற சிங்கள மக்களை மீண்டும் ஒரு மனிதப் படுகொலைக்கு கொண்டு செல்கின்ற ஒரு யுத்தியை ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த கோட்டாபய ராஜபக்ஷ ஆரம்பித்திருப்பதாக நாங்கள் அச்சம் கொள்கிறோம் என்றார். (ம-7,60)

## விரட்டவும் முடி...

பொதுஜன முன்னணியின் உறுப்பினர்களை சந்தித்தபோதே கோட்டா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்கள் போராட்டங்களை அடக்குவதற்காக அவசரகாலச் சட்டத்தை நான் அமுல்படுத்தவில்லை. போராட்டம் என்ற பெயரில் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக அனைத்துச் சட்டங்களும் பாயும்" என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

"எனக்கு எதிராக எவரும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம், போராட்டங்களையும் நடத்தலாம். ஆனால் என்னைப் பதவியிலிருந்து எவரும் விரட்ட முடியாது. 5 வருட மக்கள் ஆணைக்கமைய நான் ஜனாதிபதி பதவியில் நீடிப்பேன்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி மீண்டும் அமுல்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிராக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார்.

இதற்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கடும் கண்டனங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களின் அறவழிப் போராட்டம் மீது கைவைக்க வேண்டாம் எனவும் அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நடத்திய விசேட சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட "மொட்டு"வின் சிரேஷ்ட உறுப்பினர்களில் சிலர் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமைக்கு எதிராகக் கருத்துக்களையும் முன்வைத்தனர்.

எனினும், கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரினதும் வாய்களையும் மூடும் வகையில் ஜனாதிபதி மேற்படி விடயங்களைத் தெரிவித்தார். (ம-7)

## அனை...

அமுல்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக [illegible] தெரிவித்துள்ளது. (ம-7)

## ஐரோப்பிய...

உரிமையை எவ்வாறு முழுமையாக அனுபவிக்கின்றார்கள் என்பதை ஒரு மாதகால அமைதியான ஆர்ப்பாட்டங்கள் எடுத்துக் காட்டியுள்ளன என்று ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

அவசரகாலச் சட்டம் எதிர் விளைவை ஏற்படுத்தும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் டுவிட்டர் பதிவில் கூறியுள்ளது. (ம-7)


2021 O/L மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

வரலாறு — ஆசிரியர் RS. சந்திரன்

காலம்: மே 14, 15 சனி, ஞாயிற்றுக்கிழமை (காலை 8.00 மணி முதல் 1.00 வரை)

குறிப்புகள்:
- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்துகொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்கள் விடைகளுடன் கையேடுகளாக வழங்கப்படும்.
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையில் குறித்துக் காட்டப்படும்.
- சுகாதார விதிமுறைகளை பின்பற்றி மாணவர்கள் கலந்து கொள்ளலாம்.
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்கு பற்ற முடியும்.

றோயல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0776649134 நிர்வாகம் (C-4303)



தன நிதானய
திகதி - 2022.05.07
சீட்டிழுப்பு இலக்கம் - 785
G 06 09 24 45

மஹஜன சம்பத
திகதி 2022/05/07
சீட்டிழுப்பு இலக்கம் 4755
D 7 2 9 1 2 9

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.05.07
சீட்டிழுப்பு இலக்கம் 064
மேடம் 10 21 27 35 மேடம்

மெகா பவர்
திகதி 07/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1103
A 26 23 27 59 80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1243
கடகம் 9 2 1 8 7 0

சனிதா
ரூ. 4,016,860/-
வெற்றி இலக்கங்கள் 10 23 39 61 X

அத கோடிபதி
ரூ.4,551,280/-
வெற்றி இலக்கங்கள் 28 51 53 55 X

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1731 / 1732
சீட்டிழுப்பு திகதி 2022 / 05 / 07
தினம் வெள்ளி / சனி
E 01 19 51 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 60,106,788/-

ராசி
திகதி 2022-05-07
சீட்டிழுப்பு வாரம் 3443/ 3444
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,825,649/-
வெற்றி இலக்கங்கள் 03 26 27 37
கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,650,480/-

12
சீட்டிழுப்பு வாரம் 907/908
2022.05.07
V 15 07 22 31 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 235,775,557/-


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

15.05.1985 உத்திரட்டாதி 1 ஆம் பாதம், இராசி மீனம், U.K.P.R, சூரியன் செவ்வாய் 4 இல், உயரம் 5' 10", கிரக பாவம் 19, B.Com பட்டதாரி - யாழ். பல்கலைக்கழகம், இந்து கௌரவ குடும்பம், வயது வித்தியாசம் 4-5-7, பட்டதாரி பெண் தேவை. தரகு இல்லை. (11310)

**Mobile - 077 914 7318**
**Viber - 076 668 8199**



## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH
- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை)A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (11278)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

**TP: 077 780 3970, 074 007 1970**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 42 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

- A9 வீதியில் இருந்து 150m தூரம்
- லேடன் கொம்பனி பின்புறம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரம்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- நல்ல சூழல்
- 20 அடிப் பாதையுடன்

முன்பகுதியாக உள்ள காணி
**1 பரப்பு - 7 இலட்சம்**

பின்பகுதியாக உள்ள காணி
**1 பரப்பு - 5 இலட்சம்** (11300)

**077 658 5999, 074 043 6673**


## இடைக்கால...

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்துள்ள முன்மொழிவுக்கள் தொடர்பில் கவனத்தை செலுத்தியுள்ளது.


## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- ஆதிசிவன் முத்துமாரி அம்மன் கோவில் வீதியில்.
- இரண்டு இரண்டு பரப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- தென்மராட்சி கலைமன்றம் 100m தூரம்.
- அரச வங்கி, தனியார் வங்கி 200m தூரம்.
- சாவகச்சேரி சந்தை, பஸ் நிலையம் 300m தூரம்.

பார்வையிடும் நேரம் : காலை 8.00 - மாலை 6.00 மணி
நேரில் வரவும், விலை பேசித் தீர்மானிக்கப்படும். (11314)

**074 052 7777, 077 784 0379**
**076 241 6646**



## ஓலைச்சுவடி சோதிடம்

ஓலைச்சுவடி மூலமாக காண்டம் வாசிக்கப்படும்.
இந்தியாவில் இருந்து [ வைத்தீஸ்வரன் கோவில் ]
**அதிசூட்சும காண்டம்**
அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும்.
திருகோணமலை, மட்டக்களப்பில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும். (11315)

**Call - 076 328 7119**
**WhatsApp - 077 630 6290**



## வேலையாட்கள் தேவை

விற்பனை வாகனத்திற்கு உதவியாளர்கள் தேவை.

குறிப்பு :
ஆவரங்கால், புத்தூர், அச்சுவேலி, திருநெல்வேலி, உரும்பிராய், இருபாலை, கொக்குவில் ஆகிய பகுதிகளை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. (11311)

**077 009 0189**


மேலும் தற்போதைய ஜனாதிபதியை பதவியிலிருந்து நீக்குவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினாலும் முன் வைத்துள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கும் வேலைத்திட்டம் தற்போதைய தேசிய நெருக்கடியைத் தீர்ப்பதற்குமான ஒரு அடிப் படைத் தேவையாகக் கருதுவதாகவும் நாங்கள் தெரிவிக்கின்றோம்.

இதற்கமைவாக மக்களின் பாரிய பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்கவும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்த யோசனைகளின் அடிப்படையில் இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கான தேசிய வேலைத் திட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி தனது ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளது என்றார். (ம-7)

## பணிப்புறக்...

கோரி பாராளுமன்றத்துக்கு அருகில் கூடவுள்ளதாகவும் தீர்வு கிடைக்காவிடின் அவ்விடத்தை விட்டு வெளியேறப்போவதில்லை எனவும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. (ம-7)


## திருமாங்கல்யம்
### திருமண சேவை

உள்நாட்டு/ வெளிநாட்டு வரன்களை எதிர்பார்க்கும் மணமக்கள் தொடர்பு கொள்ளவும். (11309)

**077 120 4651**
**021 728 4433**


## மரண அறிவித்தல்



## சிவகுமார் இராஜேஸ்வரி
(பொன்னு)

கடற்கரை வீதி, ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னு என்று அன்பாக அழைக்கப்படும் சிவகுமார் இராஜேஸ்வரி அவர்கள் கடந்த 05.05.2022 (வியாழக்கிழமை) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினம் - மணி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கனகரட்டினம் - அற்புதம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவகுமார் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சண்முகநாதன், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் மகேந்திரநாதன், ஞானேஸ்வரி, லோகேஷ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயராஜ், ஜெயரூபி, ஜெயச்சந்திரன், ஜெயந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிருசா, கமலினி, கிரிதரன், லோகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அஸ்மியா, நிகிதா, ஆசிகா, அபிநயன், ஆகாஷ், அனுஸ், சஞ்ஜெய், சயானா, சந்தோஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.05.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல. 42/2, கடற்கரை வீதி, ஈச்சமோட்டையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (11299)

இல. 42/2, கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை.

தகவல்:-
T. ஈசன் (மைத்துனர்)


## வாடகைக்கு தேவை

பட்டா/ Isuzu ரக வாகனங்கள் வாடகைக்கு தேவை.
அலுமினிய Body விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு (11312)
**077 900 9541**



## உடனடி வேலை வாய்ப்பு

யாழ் நகரப்பகுதியில் உள்ள நிறுவனத்தில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை (C-4270)



**சம்பளம் - 30'000/-**
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சுப்பல் லேன், யாழ்ப்பாணம்.
**0777-068-777**



## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு
## Water Proofing

மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருட்கள் Barralastic Master Seal 540 போன்றவற்றை கொள்வனவு செய்யும்போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள். உலகத்தரம்மிக்கது (11313)

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து கேட்பார்கள். ஏமாற வேண்டாம்.

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

North and East Engineering
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363. 077 524 4177. 077 232 3000



## The Science Corner
Clock Tower Lane, Jaffna.

## EXAM BATCH - 2022

பௌதிகவியலின் செயன்முறைகள்

**R. ராகுலன் B.Sc**

ஆரம்பம் : 09.05.2022 திங்கட்கிழமை காலை 5.45 மணிக்கு
திங்கள் மற்றும் வியாழன் காலை 5.45 மணி தொடக்கம் 7.15 மணி வரை

விரும்பிய அனைத்து மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
தெளிவான விளக்கங்களும் மாதிரி வினாக்களும் (11297)

மேலதிக தகவலுக்கு : **076 545 6118**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 60.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 342

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2053 08.05.2022 தொலைபேசி : 021 222 3378







## ஓயாத போராட்டம்
## அசையாத ஆட்சியாளர்கள்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

சிறந்த எழுத்தாளரும் தொழிற்சங்கவாதியுமாகிய ஐ.தி.சம்பந்தன் அவர்கள் லண்டனில் காலமானார்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் மீண்டும் எழுந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

**மூப்பர்:** அதுசரி விதானையார் பிரதமர் பதவி விலகக் கூடிய வாய்ப்பு இருக்குதோ.

**விதானையார்:** இண்டைக்குச் சொல்லுறது பதவி விலகப் போறன் எண்டு. பிறகு நாளைக்குச் சொல்லுறது பதவி விலக மாட்டன் எண்டு.

இப்ப பிரதமரின்ர ஊடகப் பிரிவு அனுப்புகிற செய்தியில முதன்மையாக இருக்கிற செய்தி பிரதமர் பதவி விலக மாட்டார் என்பதுதான்.

**மூப்பர்:** அப்ப விதானையார் இந்த நாட்டு நிலைமை எங்க போய் முடியப் போகுது.

**விதானையார்:** இண்டைக்குத் திகதி மே-8. மே 18 இற்கு இன்னும் பத்து நாட்கள் இருக்கிறதல்லோ. இந்த நாட்களுக்குள்ள தென் பகுதியில ஒரு பெரிய பிரளயம் ஏற்படத்தான் போகுது.

**கங்காணி:** சாத்திரியார் சோதிடம் என்ன சொல்லுது.

**சாத்திரியார்:** இஞ்சே கங்காணியார் சோதிடம் என்னத்தைச் சொல்லுறது. எல்லாவற்றையும் சோதிடம் சொல்லுமாக இருந்தால், நான் மண்ணெண்ணெய் வாங்கி வைச்சிருப்பன். எரிவாயு சிலிண்டர் எடுத்து வைச்சிருப்பன். இது மாதிரித்தான் நாட்டைக் கொள்ளையடித்ததால வந்த வில்லங்கத்துக்குச் சோதிடம் என்ன செய்ய முடியும்.

**சிறாப்பர்:** சாத்திரியார் பொருளாதார நெருக்கடி பற்றி சோதிடம் எதையும் சொல்லா விட்டாலும் ஆட்சியாளர்கள் பதவிவிலகுவினமா? பிரதமர் பதவிக்கு என்ன நடக்கும் என்பது பற்றிச் சோதிடம் கணிக்கத் தானே வேணும்.

**சாத்திரியார்:** இஞ்சே சிறாப்பர் நீங்கள் நினைக்கிற மாதிரி இதொண்டும் கிரக மாற்றத்தால ஏற்பட்டதல்ல. மாறாக, ஊழ்வினைப் பயன்.

இந்தா மே மாதம் வந்திட்டுது. 2009 மே மாதத்திலதானே எங்கட தமிழ் மக்கள் வகை தொகையின்றி கொல்லப்பட்டனர்.

இந்தக் காலத்தில தான், போரில இறந்த எங்கட மக்களின்ர புனித ஆத்மாக்கள் தங்கட சபதத்தை நிறைவேற்றப் போகினம்.

**வாத்தியார்:** அதுசரி பாராளுமன்றத்தில சாணக்கியனும் ரணில் விக்கிரமசிங்கவும் கடுமையாகப் பகைச்சுக் கொண்டினம். இப்படி முந்தி நடக்கல்ல.

**பண்டிதர்:** வாத்தியார் இதெல்லாம் அரசியல்ல சகஜம் தான். ரணில் விக்கிரமசிங்க மகிந்தவோட சேர்ந்திருக்கிறார் என்று சாணக்கியன் பாராளு மன்றத்தில கூற, கடுப்படைந்த ரணில். விக்கிரமசிங்க; இஞ்ச பாருங்கடா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்ர மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் இராசவரோதயம் சாணக்கியன் கதைக்கிறதை.

**மகிந்த** சரணம் கச்சாமி; **கோட்டா** சரணம் கச்சாமி; **நாமல்** சரணம் கச்சாமி எண்டு அவர்களைத் தொழுத சாணக்கியன் இப்ப என்னை மகிந்த பக்கம் எண்டு சொல்லுகிறார் என ரணில் விக்கிரமசிங்க கொட்டிக் குளறியிருக்கிறார்.

**சாத்திரியார்:** அதெண்டால் உண்மைதான். ரணில் அப்படிச் சொன்னதும் இடியேறு கேட்ட நாகம் போல மிரண்டு போன சாணக்கியன்; கடந்த பொதுத் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்கவை பொதுமக்கள் வீட்டிற்கு அனுப்பிப் போட்டினம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடு பூராகவும் கிடைத்த வாக்குகளைக் கூட்டிக் கழிச்சு ஒரு ஆசனத்தை நியமனத்தின் பேரால் கொடுக்க, அதனை வாங்கிக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிற ரணில் விக்கிரமசிங்க... எண்டு சாணக்கியன் தட்டுமறிக்க, ரணிலுக்கும் கூட்டமைப்புக்குமான உறவு இனிச் சரிவராதெண்ட மாதிரிப் போயிற்றுது.

**கங்காணி:** அரசியலில இதெல்லாம் சகஜம் தானே.

இந்தாப் பாருங்க ஏற்கனவே உப சபாநாயகராக இருந்து தன்ர பதவியை இராஜினாமாச் செய்த ரஞ்சித் சியம்பலாபிட்டிய மீண்டும் உப சபாநாயகர் போட்டியில் நிண்டு வெற்றி பெற்ற பிறகு, மீண்டும் அந்தப் பதவியை இராஜினாமாச் செய்திருக்கிறார்.

**மூப்பர்:** பதவி அவரது கண்ணை மறைச்சுப் போட்டுது. பிறகு வீட்டுப் பக்கம் போக முடியாமல் வரும் போது தான் உந்த உப சபாநாயகர் பதவி வேண்டாம் எண்ட ஞானம் வருகுது.

**வாத்தியார்:** நாங்கள் அரசியல் கள நிலைமையை மட்டும் விமர்சித்துக் கொண்டிருக்கிறம். ஆனால் எல்லா பொருட்களின்ர விலைகளும் இன்னும் ஏறப் போறதாகச் சொல்லுகினம்.

ஆகையால நாங்களும் விழிப்பாக இருக்க வேணும். இவ்வாறு வாத்தியார் கூற அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.



## ஊழ்வினைப் பயனல்லோ இவையளைச் சும்மா விடாது!

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கடத்துவதனூடே

# பிசுபிசுக்கப்படுமா போராட்டங்கள்

## இதுவே ஆட்சியாளர்களின் யுக்தி

**“ அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போராட்டங்களுக்கு தீர்வு வழங்காமல் காலம் கடத்துவதனூடாக அப்போராட்டங்களை பிசுபிசுக்கச் செய்யலாம் என ஆட்சியாளர்கள் நினைக்கக் கூடும்... ”**

நாடு என்றுமில்லாத நெருக்கடி நிலையை எட்டி விட்டதை அனைத்து தரப்பாலும் உணர்ந்து கொண்டாலும் அது தொடர்பில் அலட்டிக் கொள்ளாதிருப்பது ஏன் என்பது இன்று வரை புரியவில்லை.

பொருளாதார வீழ்ச்சி என்பது மிகத் தீவிரம் பெற்று விட்டது. எத்துறையை எடுத்துக் கொண்டாலும் அங்கு மிகப் பின்தங்கிய நிலைமையையே காணக்கூடியதாக உள்ளது.

அரசுக்கு எதிரான போராட்டங்கள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவற்றை அரசு செவிசாய்த்து நடக்கிறதா எனின் அதற்கான பதிலை இங்கு சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

நாட்டின் இந்த நிலைக்கு யார் காரணம் என்பது சகலரும் அறிந்த ஒன்றெனினும் அதை ஆட்சியாளர்கள் ஏற்கத் தயாராக இல்லை என்பதற்குள் இருக்கும் சுயநல அரசியலையும் அதிகாரங்கள் குவிக்கப்பட்ட நிலையையும் நாம் இங்கு கவனித்தே ஆக வேண்டும்.

ஆட்சியாளர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்கள் நாளுக்கு நாள் மிகத் தீவிரம் பெற்று வரும் நிலையைக் கூட பொருட்படுத்தாத ஆட்சியாளர்கள் தமக்கெதிரான ஆர்ப்பாட்டங்களை எப்படி அடக்கி ஒடுக்கலாம் என்பதில் கவனம் செலுத்துகின்றனரே தவிர ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பதாக தெரியவில்லை.

அதிலும் கடந்த வெள்ளிக்கிழமை ஆட்சியாளர்களுக்கு எதிராக நாடு பூராகவும் நடைபெற்ற ஹர்த்தால் போராட்டம் பாரிய வெற்றியை ஏற்படுத்தியிருந்தது.

என்றுமில்லாதவாறு அனைத்துத் தரப்பினரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததுடன் அதை உணர்வுபூர்வமாகவும் அனுஷ்டித்திருந்தமையினை பார்க்கும் போது இந்த ஆட்சியாளர்கள் மீதும் இவர்களின் ஆட்சி மீதும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை உணர முடிகின்றது.

இவற்றிற்கெல்லாம் ஆட்சியாளர்களால் சொல்லப்படும் ஒரே தீர்வு போராட்டங்களால் பயன் ஏதும் இல்லை என்பதாகவே இருக்கிறது.

இங்கு இந்த விடயத்தைக் கூற வேண்டியவர்கள் பொருளாதார வல்லுநர்களே தவிர யாருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றதோ அந்தத் தரப்பு அல்ல என்பதை உணராத வரை நமக்கு மீட்சி ஏற்படாது.

இந்த அரசாங்கம் முழுவதும் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த வியாழக்கிழமை பல்கலைக்கழக மாணவர்கள் பாராளுமன்ற நுழைவு வீதியில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

அரசுக்கெதிராக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று இருந்தாலும் பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தை அடக்குவதில் அரசு மிகத் தீவிரம் காட்டியுள்ளதை உணர முடிந்தது.

போராட்டத்தை மேற்கொண்ட மாணவர்கள் மீது பொலிஸார் கண்மூடித்தனமாக கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு இருந்தமை இந்த அரசின் பொய் முகத்தை கிழிக்கும் வகையில் இருந்தது.

இக் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் உட்பட பல தரப்பினரும் தமது கண்டனத்தை தெரிவித்திருந்தனர்.

நிலை இதுவாக இருக்கையில், கடந்த புதன்கிழமை பாராளுமன்றில் விசேட உரையாற்றிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அழுத்தங்களுக்கு அடிபணிந்து ஒருபோதும் பதவி விலக மாட்டேன் எனத் தெரிவித்திருந்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்வதினூடே தேசிய அரசாங்கத்தை அமைக்க வழிவகுக்கும் என்ற எதிர்பார்ப்பு பல தரப்பட்டவர்களிடம் இருந்த நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அப்படி எனின் இந்த அரசாங்கம் தமது பதவியைத் துறந்து நாட்டு மக்களின் மனநிலைக்கு ஏற்ப நடந்து கொள்ளப் போவதில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இதேநேரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய நிதியமைச்சர் அலி சப்ரி, ஒரு முக்கியமான விடயத்தை தெரிவித்திருக்கிறார்.

அதாவது ராஜபக்ஷ அரசாங்கம் செய்த வரலாற்றுத் தவறே நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குக் காரணம்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சுமார் இரண்டு வருடங்கள் ஆகும். தற்போதைய வெளிநாட்டு கையிருப்பு வெறும் 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே என்ற உண்மையைக் கூறி பெரிய குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார்.

அத்துடன் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு இன்னும் ஓர் இரு மாதங்களில் மிகத் தீவிரமாக இருக்கும் என்று நாட்டு மக்களுக்கு ஒரு எச்சரிக்கையையும் விடுத்திருக்கிறார்.



ஒருபுறம் பொருளாதார நெருக்கடி, மறுபுறம் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்க்ள் என ஆட்சியாளர்கள் இருதலைக் கொள்ளி எறும்பாய் துடித்துக் கொண்டிருந்தாலும் ஆட்சியை விட்டு ஓடுவதற்கு அவர்கள் கொஞ்சமும் தயார் இல்லை என்பது மட்டும் புரிகிறது.

இலங்கையின் உற்ற தோழன் என்று ஆட்சியாளர்களால் வர்ணிக்கப்பட்ட சீனா தனது இலங்கைக்கான கடன் திட்டத்தை நிறுத்தியிருந்த நிலையில் இந்தியா மிகத் தாராளமாய் இலங்கைக்கு பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றமையைக் காணக்கூடியதாய் உள்ளது.

இதற்கு சான்று பகர்க்கும் வகையில் இலங்கைக்கு விஜயம் செய்த பா.ஜ.க. தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை இலங்கையை அனுமான் போல சுமக்க இந்தியா தயார் என்று கூறியிருக்கிறார்.

இதற்குள் இருக்கும் உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது இலங்கைக்கு எவ்வித உதவியை வழங்கவும் நாம் தயார் என்பதனூடாக சீனாவின் ஆதிக்கத்திற்கு முற்றுப் புள்ளியிடும் செயற்றிட்டத்தையும் அரங்கேற்றியுள்ளது.

வடக்கின் பல பாகங்களுக்கும் சென்று அண்ணாமலை பல்வேறு தரப்புக்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தமை மிக முக்கியமான விடயமாக அமைந்திருந்தது.

ஒரு கட்சியின் மாநிலத் தலைவராக உள்ள ஒரு பிரமுகருக்கு இவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது எனின் அவ்விஜயத்தின் நோக்கம் எவ்வாறானது என்பதை நாம் இங்கு புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவின் சரியான நேர உதவியானது இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஆசுவாசத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் இவ்வாறே கொஞ்சம் கொஞ்சமாய் காலம் கடத்துவதனூடே தமக்கெதிரான போராட்டங்களை பிசுபிசுக்கச் செய்யலாம் என்கின்ற எண்ணம் இருக்கலாம் என்பதை யாரும் மறுத்து விட முடியாது.

நிலை இதுவாக இருக்கையில், நேற்று முன்தினம் அவசரகாலச் சட்டமூலம் மீண்டும் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியால் வர்த்தமானி வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பது போராட்டக்களத்தில் இருப்பவர்களுக்கு கெலியூட்டும் வகையில் உள்ளதை உணர முடிகிறது. இந்த அவசரகாலச்சட்டமூலத்தினூடாக இந்த அரசு தான் நினைத்ததை செய்து முடிக்க எத்தனிக்கும் என்பது திண்ணம்.

ஏலவே ஒருமுறை ஜனாதிபதியால் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பால் அது மீளப்பெறப்பட்டு இருந்தது. இந்நிலையிலேயே மீண்டும் அவசரகாலச் சட்டமூலம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனூடாக பொலிஸாருக்கு அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படும்.

ஒருவரை நீதிமன்ற அனுமதி இன்றி தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய முடியும் போன்ற அரசுக்கு நன்மை பயக்கும் இவ் அவசரகாலச் சட்டமூலத்தினூடே அரசுக்கு எதிரான போராட்டக்காரர்கள் அடக்கி ஒடுக்கப்படுவார்களா? அல்லது பல்வேறு தரப்பினருடைய அழுத்தங்களால் மீண்டும் அது ஜனாதிபதியால் மீளப்பெறப்படுமா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அம்புலிமாமா

## சரியாகக் கேட்டான்





(நேற்றைய தொடர்ச்சி)

விக்கிரமனும் "வீரசிம்மன் தன் தந்தையை விரும்பிய அளவிற்கு தனது மனைவியையும் நேசித்தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.


அதனால் தான் அவன் தன் தந்தையின் உடலை பாதுகாத்து வந்தது போல தன் மனைவியின் உடலையும் பாதுகாத்து வந்தான். ஜெயபாலனின் உடலை எரிக்காமல் கோட்டைக்குள் வைத்ததால் தான் திலோத்தமைக்கு அகால மரணம் ஏற்பட்டதாக மகான் கூறினார். அதனால் ஜெயபாலன் உயிர் பெற்று விட்டால் அந்த தோஷம் போய் விடும். அதனால் திலோத்தமை உயிர் பெற்று விடுவாள் என்பதை வீரசிம்மன் புரிந்து கொண்டான். மகான் ஒரு உயிரைத் தான் உடலுக்குத் தர முடியும் என்றதால் வீரசிம்மன் தன் தந்தையை உயிர்ப்பித்து தோஷத்தை போக்கி தன் மனைவியையும் உயிர் பெற்று வர வழி செய்தான். இருவர் தானே இறந்தனர். ஆனால் மகான் மூவர் பிழைத்தனர் என்றது வீரசிம்மனையும் அவன் மனைவியையும் அவள் வயிற்றில் வளர்ந்து வந்த சிசுவையும் குறித்துத் தான்" என்றான்.

விக்கிரமனின் சரியான பதிலால் அவனது மௌனம் கலையவே, அவன் சுமந்து வந்த உடலோடு உயரக் கிளம்பிப் போய் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## கிர்கிந்தா காண்டம்




இலக்குவன் தன் கால் நகத்தால் அதை உதைத்துத் தூக்கி எறிந்தான். அது சென்ற இடம் தெரியாமல் நெடுந்தொலைவில் விழுந்து மறைந்தது. இலக்குவன் ஆற்றலை அறிய, இது சுக்கிரீவனுக்கு ஒரு வாய்ப்பாய் அமைந்தது.

"இது என்ன?" என்று இராமன் கேட்டான்.

"துந்துபி என்பவன் போர்த்தினவு கொண்டு வாலியோடு மோதினான்; வெற்றி, தோல்வி இன்றி இருவரும் கட்டிப் புரண்டனர்.

இறுதியில் வாலி அவனைக் குத்திக் கொன்று தரையில் வீழ்த்தினான். அவன் தசைப் புண்களைக் கழுகும் நரிகளும் தின்று ஒழித்தன; அவன் எலும்பு மட்டும் அசையாமல் இங்கு கிடந்தது" என்று கூறினான்.

"துந்துபியின் மாமிசப்பிண்டம் இந்த ருசியமுக பருவதத்தில் வாலியினால் தூக்கி எறியப்பட்டது; இங்கு மதங்க முனிவர் தங்கி இருந்தார். அவர் இதைக்கண்டு அருவெறுப்புக் கொண்டார். "இதை எறிந்தவன் இங்கு வந்தால் அவன் தலை சுக்கு நூறாகுக" என்று சாபம் இட்டார்; அந்த சாபம் தான் எங்களுக்குப் புகலிடம் தந்தது" என்று விளக்கினான்.

### சீதை சிந்திய கலன்கள்

அப்பொழுது வானரக்குலம், இடியும் அஞ்சும்படி வாய் திறந்து ஆரவாரித்தது. தூய நற்சோலையில் இராமனும் சுக்கிரீவனும் அமர்ந்து இன்னுரையாடினான்.

"நாயக! நான் உணர்த்துவது ஒன்று உண்டு" என்று சுக்கிரீவன் உரையாடினான்.

"இவ்வழி யாம் இருந்தபோது விண் வழியாய் இராவணன் கையகப்பட்ட அபலை ஒருத்தி, அழுத கண்ணீரோடு தான் முடித்து வைத்திருந்த அணிகலன்களைக் கீழே போட்டுச் சென்றாள்; அவற்றைப் பாதுகாத்து வைத்துள்ளோம்" என்று கூறி அவற்றை அவன்முன் வைத்தான்.

அணிகலன் அவனுக்கு உயிர் தரும் அமுதமாய்க் காட்சி அளித்தது; அணிகலன் கண்களினின்று மறைந்தது. அதற்கு உரிய அணங்கின் தோற்றம் கண்முன்வந்து நின்றது; அணிகளைக் கண்டதால் மகிழ்ச்சியும், அணிக்கு உரியவள் அருகில் இல்லாததால், அயர்ச்சியும் அடைந்தான். இராமன் தன்னிலை கெட்டுச் சோர்ந்து மயங்கி விழுந்தான்; தான் உயிரோடு இருக்கும்போதே அணிகளைக் களையும் அவல நிலை ஏற்பட்டதே! என்று வருந்தினான். அருகிலிருந்த சுக்கிரீவன் ஆறுதலாய் நல்லுரைகள் தந்து மீண்டும் உணர்வு பெறச் செய்தான். "கண்டது சீதையின் அணிகலன்களை; கொண்டவன் அரக்கன் இராவணன்" என்பது முடிவு செய்யப்பட்டது; அவன் எங்கிருந்தாலும் அவனைக் கண்டு தெளிந்து, கொண்டு வருவது தன் கடமை என்று சுக்கிரீவன் கூறினான்.

### வாலி வதை

"இனி முதலில் வாலியைக் கொன்று, பின் சுக்கிரீவனுக்கு முடிசூட்டு; அவன் அரசனாவான்; அவன் ஆணை பிறப்பித்ததும் எழுபது வெள்ளம் எண்ணிக்கையுள்ள வானரர் ஒன்று சேர்வர்; அவர்களை ஒவ்வொரு இடமாய் அனுப்பினா காலம் நீட்டிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு முன்னர் அரசியல் மாற்றம் ஏற்படுமா வியாசரே?

**சுதன் — குப்பிழான்**

**இலங்கையில் நீதி எப்படி இருக்கிறது வியாசரே?**

ஒரு தராசின் ஒரு பக்கத்தில் ஒரு கிலோ இரும்பையும் மறு பக்கத்தில் ஒரு கிலோ பஞ்சையும் வைத்தால் அது சரி சமமாகத் தானே நிற்கும்.நிற்க வேண்டும்.
இரும்பு ஒரு கிலோ என்பது சிறிய துண்டாக இருக்கும். பஞ்சு ஒரு கிலோ என்பது அதிகமாக இருக்கும்.
ஆதலால் நிறையில் நீதியில் மாற்றம் இல்லையே.
அவ்வாறு மாற்றம் இருக்குமாக இருந்தால் அதற்குப் பெயர் நீதி இல்லையே.
இதைப் புரிய வேண்டியவர்கள் புரிந்து நடந்து கொள்ள வேண்டும்.
இரும்புக்கு ஒரு நீதியும் பஞ்சுக்கு இன்னொரு நீதியும் வழங்குவது முறையல்லவே.

**சிவம் — வதிரி**

**நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் மாமா?**

ஒருவர் இறந்துவிட்டார் என்று தெரிந்ததற்குப் பின்னர் அவருக்கு மருத்துவம் செய்யச் சொன்னால் உங்களால் முடியுமா தம்பி.
அப்படி ஒரு நிலையில் தான் இலங்கை இப்போது இருக்கிறது.பிழிந்தெடுக்க வேண்டியதையெல்லாம் எடுத்துவிட்டார்கள்.
இப்போது இலங்கை வெறும் சக்கையாய் தான் இருக்கிறது.
இதை இனி பிழிந்து பயன் என்ன?
பல நாடுகளிடம் காசை வாங்கி இலங்கையை பாகம் பிரிப்பதை விட ஒரு நாட்டிற்கு நல்ல விலைக்கு விற்றுவிட்டால் எல்லாப் பிரச்சினையும் தீர்ந்துவிடும்.
தயவு செய்து இதை ஆட்சியாளர்களிடம் சொல்லி விடுங்கள் பிளீஸ்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**எல்லோருக்கும் வீட்டுக்குப் போக ஆசை தானே. ஆனால் ஆட்சியாளர்கள் மட்டும் ஏன் வீட்டுக்குப் போக மாட்டோம் என்கிறார்கள்?**

சும்மா இருக்கிற சுகம் என்ன சுகம் தெரியுமா? எவ்வளவு கஷ்டப்பட்டு அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள் தெரியுமா? நீங்கள் அதை எல்லாம் புரிந்து கொள்ளாமல் வீட்டுக்குப் போங்கள் என்றால் எப்படி வீட்டுக்குப் போவது.
எங்களை இந்த ஆட்சிக்கு கொண்டு வந்தவர்கள் நீங்கள் (சிங்களவர்). இப்போது நீங்களே வீட்டுக்குப் போகச் சொன்னால் நியாயமா?
நாங்கள் வீட்டுக்கெல்லாம். போகமாட்டோம். எங்களுக்கு இந்த இடம் பிடித்துவிட்டது.
இங்கு இருக்க மிக நன்றாக இருக்கிறது.
நாங்கள்போக மாட்டோம்.
நீங்களும் வீட்டுக்குப் போகாமல் வீதியிலே தானே நிற்கின்றீர்கள். உங்களை வீட்டுக்குப் போகச் சொல்லி நாங்கள் சொன்னோமா?
அது என்ன எங்களை மட்டும் வீட்டுக்குப் போகச் சொல்லி அடம்பிடிக்கின்றீர்கள்?




**தர்னிகா — மடத்தடி**

**என்னடா வாழ்க்கை இது என்று வெறுப்பாக இருக்கிறதே வியாசரே?**


என்ன செய்வது அழகிய எங்கள் நாட்டை எவ்வளவு குட்டிச்சுவராக்க முடியுமோ அவ்வளவுக்கு ஆக்கிவிட்டார்கள்.
இலங்கையில் சுரண்டாத இடமே இல்லை. அந்தளவிற்கு எல்லாப்பக்கமும் சுரண்டிச் சுரண்டி துடைத்து எடுத்துவிட்டார்கள்.
ஏதோ இது தமது அப்பன் வீட்டுச் சொத்து என்று நினைத்துவிட்டார்களோ என்னமோ? தாங்கள் நினைத்த பாட்டில் எல்லாவற்றையும் முடித்துவிட்டார்கள். அட நாசம் இவ்வளவும் செய்து அது மக்களுக்கு அம்பலமான பின்பும் கதிரையைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறார்களே இவர்களுக்கு வெட்கம் இல்லையா?

**மதுவன் — மீசாலை**

**தமிழக முதல்வரின் நிவாரணம் ஈழத் தமிழரின் துன்பத்தைப் போக்குமா வியாசரே?**

நாம் தொப்புள் கொடி உறவுகள்.எமக்குள் இருப்பது சாதாரண உறவு அல்ல என்பதை தமிழக அரசு மீண்டும் நிரூபித்திருக்கிறது.
வன்னியில் கொத்துக் கொத்தாய் தமிழினம் மாண்டு போக எத்தனை தமிழக இளைஞர்கள் தம் மைத்தீ மூட்டி எரித்துப் போரை நிறுத்தக் கோரினர்.
இலங்கையில் நடந்தது இன அழிப்பே என்று தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றியது.
இப்படிக் காலம் காலமாய் நாம் துன்பப்படும் போது தோள் தருவது நம் தொப்புள்கொடி உறவுகளே.
இந்த உறவு உதவியால் மலர்ந்ததல்ல. உண்மையான உறவு. இதை யாராலும்சிதைத்துவிட முடியாது.


அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**021 567 1532**
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்
அல்லது ஆசிரியர், வியாசர் பதிவுகள், வலம்புரிப் பத்திரிகை,
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும்
முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

எல்லோருக்கும் வீட்டுக்குப் போக ஆசை தானே. ஆனால் ஆட்சியாளர்கள் மட்டும் ஏன் வீட்டுக்குப் போக மாட்டோம் என்கிறார்கள்?

**மது — கொடிகாமம்**

**நீ எதைக் கொண்டு வந்தாய் ? என்னுடைய சொத்தை ஏன் அழிக்கிறாய்? நான் உனக்கு தந்த சீதனம் எங்கே என்று கேட்கும் ஒரு சில பெண்கள் பற்றி சொல்ல முடியுமா?**

கணவன்- மனைவி என்ற உறவுக்குள் இவ்வாறான எண்ணங்கள் தோன்றுமாக இருந்தால் நிச்சயம் அந்தக் குடும்பம் உருப்பட வாய்ப்பே இல்லை.
பெண் என்பவள் பொறுமைசாலியாய் இருக்க வேண்டும்.
அவ்வாறு இல்லாமல் இருந்தால் அந்தக் குடும்பம் ஆட்டம் காணத் தொடங்கிவிடும்.
குடும்பம் என்பது இரண்டு மாடுகள் பூட்டப்பட்ட வண்டில் போன்றது.இதில் இரண்டும் ஒன்றாய் ஒற்றுமையாய் சமாந்தரமாய் இழுத்தாலே ஒழிய ஒன்று குறுக்கே இழுத்தாலும் அதன் பாதை மாறி விடும்.
ஆண்-பெண் என்பதற்கு அப்பால் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து நடப்பதே உண்மையான குடும்பத்திற்கு அழகு.

**குமார் — யாழ்ப்பாணம்**

**இலங்கையில் தமிழராய் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஒரு கடப்பாடு உண்டா வியாசரே?**

உண்டு.ஆனால் இப்போதைய நிலையில் எதையும் செய்துவிட முடியாது.
அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு விட்டது.இது சிங்களவர்களை விட தமிழர்களைப் பதம் பார்ப்பது தான் அதிகமாக இருக்கும்.
ஏனென்றால் எங்கு இளக்கம் இருக்கிறதோ அங்கே தான் அடிப்பார்கள். ஆதலால் நாம் கொஞ்சம் அவதானமாக இருப்பது நல்லது.
இது எங்கள் தேசம். இதை எவருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது தான்.
ஆனால் இப்போதைய நிலையில் தமிழர்களாகிய நாம் அமைதியாய் இருப்பது ஒன்றே சாலச் சிறந்தது.
இல்லையேல் கஷ்டப்பட வேண்டிவரும்.

**தருஷ் — யாழ்ப்பாணம்**

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு முன்னர் அரசியல் மாற்றம் ஏற்படுமா வியாசரே?**

அட போங்கடா ஏதோ மாற்றம் ஏற்படும். இந்தா இன்னும் 5 நாட்கள் தான், 10 நாட்கள் தான் என்று காலக்கெடு எல்லாம் போட்டார்கள். ஆனால் ஆட்சியாளர்கள் எதற்கும் மசிவதாகத் தெரிவதில்லை.
நாம் ஒன்று நினைக்க கடவுள் வேறு ஒன்று நினைப்பான் என்று கூறுவோம் அல்லவா?
தென் பகுதி அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களைச் செய்ய அதை ஒடுக்க அரசு அவசரகாலச் சட்டத்தை முடக்கிவிட,
அட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் நெருங்கி வா.
இது எதையோ சொல்கிறது தம்பி.
கடைசியில் இந்த அவசரகாலச் சட்டத்திற்குள் சிக்குண்டு போகிறவர்கள் தமிழர்களாகத் தான் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச அன்னையர் இன்று

பத்து மாதம் சுமந்து என்னைப் பெற்றெடுத்தாய்
பகல் இரவாக கண் விழித்து காத்திடுவாள்
உணவோடு கல்வி அறிவையும் ஊட்டுவாள்
தாலாட்டி சீராட்டி பாலூட்டி வளர்த்திடுவாள்

கண்ணை இமை காப்பது போல காத்திடுவாள்
கல்வி உயர ஏணியாய் இருந்திடுவாள்
நாடு போற்ற நல் பிரஜையாக வளர்த்திடுவாள்
குடும்பத்தை வழிநடாத்தும்
பொறுப்புள்ள மனையாளாய் இருந்திடுவாள்

குடும்பத்தில் பணிவிடை செய்யும் சேவகியாகிறாள்
எதிர்காலத்தைப் பற்றி இறைவனிடம் வேண்டிடுவாள்
பொறுப்புள்ளவர்களாக வளர பொறுப்பை உணர்த்திடுவாள்
பொருளாதார சுமையை பொறுமையுடன் சுமந்திடுவாள்

அதிகாலையில் துயில் எழுந்து கடமைகள் செய்திடுவாள்
சீர்கேடுகளில் ஈடுபடாமல் கண்டிப்பாய் கடிந்திடுவாள்
துன்பம் வரும் வேளை ஆறுதலாய் இருந்திடுவாள்
சிக்கனமாய் செலவு செய்து சேமிப்பை பழக்கிடுவாள்

கவலைகள் வரும்போது கண்ணீரால் நனைத்திடுவாள்
தாலாட்டுப் பாடி கண் தூங்க வைத்திடுவாள்
அறுசுவை உணவை அளவோடு சமைத்திடுவாள்
நோய்நொடியின் வேளை அருகில் இருந்திடுவாள்

இறை பக்தியுடன் வளர என்றும் இறைவனிடம் வேண்டிடுவாள்
அரவணைக்கும் அன்னையாய் நாளும் இருந்திடுவாள்
அறியாததை பலதை சொல்லி ஆசிரியராய் இருந்திடுவாள்
சமூகம் மதிக்கும்படி திகழ அறிவுரை வழங்கிடுவாள்

எஸ்.பி.தனா,
தெல்லிப்பழை.

## தமிழின் பலம்

அன்புக்கு பண்போடு
இன்பமாய் வாழ்வோர்க்கு
துன்பங்கள் வாராதறி
துன்பத்தால் வரும் துயர்
எந்நாளும் அழியாது வாழும்
அன்பே உயர்வைத் தரும்

கல்விக்கு பொருள் கூறும்
சொல்லேர் உழவர் தம்
சொல்லுக்கு விலை இல்லையே
சொல்லுக்குச் சொல்லோர்
பொருள் கூறும் பாவலர்
எல்லோர்க்கும் நலமே ஆவர்

எல்லோர்க்கும் எல்லாமும்
கிடைக்கின்ற வழிகாணில்
விடைபெற்று செல்லும் துயர்
கல்லார்க்கும் கற்றோர்க்கும்
பொருள் கூறும் பாவலர்
வல்லமையே தமிழின் பலம்

மொழி நூறு புவி மீது
வாழ்ந்தாலும் வழி நூறு
கேட்டை அழித்துவிடும்
துயரோடு துயர் சேர்ந்து
மனிதர்க்கு சுமையாகும்
துயரை அழிப்பின் சுகம்

மா.செல்லத்தம்பி,
கிளிநொச்சி.

## வினை சூழும் ஜாக்கிரதை

உலகில் வல்லவன் பாதம் பணிந்து
நல்லவர் போல் முகம் காட்டி காரியம் பெற்று
நம்பிய மக்களை அழித்திட
அகோர முகம் கொண்டு வதைத்து
வதைபட்ட உயிர்களெல்லாம்
ஆவியாய் நின்று வதைக்குது இன்று

கதறியழுது சிந்திய கண்ணீரெல்லாம்
காற்றிலே கலந்து வினையாகி வந்து
காரணமானவரின் சந்ததியே
கேள்விக்குறியாகும் வண்ணம் கலங்கடிக்குது

அப்பாவி உயிர்களெல்லாம் ஐயோ எனக் கதறி அழ
ஆஹா ஓஹோ என்று வெற்றி கொண்டாடிய இனம்
இன்று வாழ்வில் இருள் சூழ்ந்து
பசி பட்டினியாய் பொருளின்றி தவிக்குது

மீட்பர்கள் என்று ஏற்றிப் போற்றியவர்களை
வேண்டாம் போ என்று சொல்லும் நிலை
நாடு வளமாக மக்கள் நலமாக இல்லையெனில்
அரசு தான் எதற்கு
எல்லோரும் பிச்சை எடுப்பின்
பிச்சை போட யாருண்டு

வல்லவனிடம் இருந்த வல்லமை எங்கே?
எதுவும் எம் கையில் இல்லை
அநியாயம் செய்பவரே சிந்தியுங்கள்
செய்வன எல்லாம் வினையாகி
அழிந்து போவீர் ஜாக்கிரதை

ம.திருவரதராசா,
வவுனியா.

## மௌனத்தின் தேடல்- 559



### யார் அறிவார்

பஞ்சம் தலைவிரித்தாடிடவே
பசி பட்டனி உயிர் பறித்திடவாய்
வறுமையுமோ வாட்டி வதைத்திடவாய்
ஒட்டி ஒடுங்கிய உடலுடனேயாய்
இப்பரிதாபச் சிறுவனின் நிலைமையில்
பரி உபகாரம் புரிந்திட யாருமுளரோ

தங்கத்தமிழன்,
காரைநகர்.

### சோமாலியா...

அழகிய சிங்கப்பூராய்
ஆக்கிடுவோம் என
அரச கட்டில் ஏறியவர்
சிரசில்லா சிந்தனையால்
சிறுமை செய்து மக்கள்
சொத்துடைமை சூறையாடி
சோமாலியா ஆக்கினரே
சோக நிலைகாட்டி நிற்கும்

க.ஆறுமுகசாமி,
நல்லூர்.

### புசிப்பதற்கு ஏதும்...

தன் வயிற்றுப்பசி நோக்கார்
கண்துஞ்சார் அன்னை தன்
தளிரின் பசி ஆற்றத்
தவம் கிடப்பார் இறைவன்
எல்லா வீட்டிலும் தாய் வடிவில்
வந்து அருள்பாலிப்பானாக
பசி நீக்கிப் புசிப்பதற்கு ஏதும்
பகிர்ந்தளித்து வாழ வைப்பீராக

க.வானிசன்,
நல்லூர்.

### தாய் ஒரு தியாகி

வாழ்வில் எந்த இடர்
வந்த போதும் தன்
பிள்ளையை என்றும்
அன்போடு தோளில்
இப்படிச் சுமக்கும் தாயே
உலகில் தியாகத்திற்கு
அர்த்தமாய் அகராதியில்
நீயே திகழ்கிறாய்

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.

### ஈகை செய்க

வயிறு ஒட்டி என்புடன்
தோல் ஒட்டி விழி பிதுங்கி
மண்டை ஓடு பெருத்து
பட்டினிச்சாவை இயற்கை
பதமாகக் காட்டி நிற்க
இன்னும் இரங்கா மனம்
போகும்போது ஏதும் கொண்டு
போவதில்லை இதை உணர்ந்து
ஈகை செய்க மானுடமே

[illegible],
சுருவில்.

## மௌனத்தின் தேடல்- 558



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்க

### திருடியதால்

வளங்கள் நிறைந்த நாடுகளின்
வளங்களைத் திருடி
உல்லாசமாய் உயர்ந்த நாடுகள்
வள நாட்டின் மாந்தர்
வறுமையின் பிடியில்
உருக்குலைய
வள்ளல்கள் போல் பகட்டாய்
சொற்பமாய் கொடுப்பது
ஒருவேளை பசிக்குக் கூட
கிடைக்காத கொடுமை இது

சி.இ.அன்புத்துரை,
சம்மட்டியோலை.

### வலியின் கொடுமை

இதயங்களுக்கு பசி
இதமில்லாத வார்த்தை
வயிறுகளுக்கு கெலி
மனதுகள் வதைபடுகிறது
உரிமை இல்லாத உறவுகள்
தனிமை ஒன்றே
போதுமாகிறது.


லிஷாய்னன்,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**இரண்டு நாட்களுக்கு முன்னர், தனக்குப் புதிய சப்பாத்து வேண்டுமென்று அல்பா கம்ப வுண்டில் பாதுகாப்புக்கு நின்ற அதிகாரி ஒருவரிடம் ஒழுங்கு செய்து தருமாறு கேட்டிருக்கிறான். அந்த அதிகாரியும் முகாமின் அகதிகளுக்கான களஞ்சியத்திலிருந்து எடுத்துக் கொடுத்திருக்கிறார்.**

## வலி சொல்லும் தொடர்... 31



அதிகாரிகளைக் கண்ட இடங்களிலெல்லாம் கூட்டமாக நின்று சில சிறுவர்கள் கூச்சலிட்டார்கள். கேலியாகச் சிரித்தார்கள்.

ஒரு பாதுகாப்பு அதிகாரி தனது தடித்த தோலை இறுகப் போர்த்துக்கொள்ளவேண்டிய தருணங்களாக, அந்த மாலை நேரம் முகாமின் ஒவ்வொரு மூலையிலும் நின்று மிரட்டியபடியிருந்தது.

முகாமின் ஒவ்வோர் அறையாகச் சென்ற அதிகாரிகள், அகதிகளின் படங்களுடன் ஒப்பிட்டு ஒவ்வொருவரையும் சோதனை செய்தார்கள். இன்னும் வேறு யாராவது தப்பியோடியிருக்கிறார்களா அல்லது ஒருத்தன் மட்டும்தானா என்று உறுதி செய்து கொண்டார்கள்.

குடிவரவுத்துறை அலுவலகத்தில் அவசர சந்திப்பு நடைபெற்றது. விசாரணைகள் ஆரம்பித்தன.

அவுஸ்திரேலியாவில் எந்த வதிவிட உரிமையும் இல்லாத ஒரு நபர், சட்டவிரோதமாக நுழைந்திருக்கிறார் என்றால், அந்தச் சம்பவம் தலைநகர் கன்பரா வரைக்கும் முறைப்பாடு செய்யப்பட வேண்டிய முக்கிய குற்றச்செயல். தப்பியோடிய நபரால் ஏதாவது ஆபத்து ஏற்பட்டாலோ அல்லது தப்பியோடிய நபருக்கு ஏதாவது ஆபத்து இடம்பெற்றுவிட்டாலோ அதற்கு எப்படி, எந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பது என்பது உட்பட பல சிக்கலான விடயங்களைக் கையாள்வது தலைநகர் கன்பராவில் உள்ள குடிவரவுத்துறையின் தலைமை அதிகாரிகளே.

அகுனா, நைஜீரியாவைச் சேர்ந்த அரசியல் போராளி. அங்கு அவன்மீது நடத்தப்பட்ட கொடிய தாக்குதலால், அவன் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில்தான் இந்தோனேசியா வந்து, அங்கிருந்து படகு மூலம் அவுஸ்திரேலியா வந்தான் என்பது அவுஸ்திரேலியக் குடிவரவுத்துறையிடம், அகுனா பற்றிக் கையிருப்பிலுள்ள தகவல்கள்.

மனநிலை பாதிக்கப்பட்ட, தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் கூடக் குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகு தொடர்ச்சியாகப் பார்க்க முடியாத, உளச்சிக்கல் மிகுந்த அகுனா, எவ்வாறு முகாம் அதிகாரிகள் அனைவரது கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு, வேலி பாய்ந்து ஓடினான்?

ஏன் ஓடினான், எங்கு ஓடினான் என்பது குறித்து குடிவரவுத்துறையினரால் ஆரூடம் கூற முடியவில்லை.

கொழும்பில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டவர்களையெல்லாம் வலைபோட்டுப் பிடித்து, மணிக்கணக்காக விசாரணை நடத்தி, தகவல் கறப்பதற்குத் தெரிந்த அவுஸ்திரேலியப் பாதுகாப்புத் தரப்புக்கு, மனநலம் பாதிக்கப்பட்ட அகதி ஒருவனின் அடுத்தகட்ட திட்டம் என்ன என்பது குறித்து எதுவுமே தெரியாமலிருந்திருக்கிறது என்றால், அது எவ்வளவு ஏளனமான முரண்.

தங்களுக்கு இடையிலான உயர் மட்ட, இடைமட்ட, அடிமட்டச் சந்திப்புகளை நிறைவு செய்துகொண்டு, முகாமின் பாதுகாப்பு அதிகாரிகளுடனான சந்திப்பை ஆரம்பித்தார்கள் குடிவரவுத்துறை அமைச்சு அதிகாரிகள்.

அகுனா கடைசியாக அணிந்திருந்த ஆடை முதற்கொண்டு, சாப்பிட்ட உணவு, பேசிய சக அகதிகள், உட்கொண்ட மருந்து, கடைசியாக எங்கு நின்று கொண்டிருந்தான் என்று அவனது அத்தனை நடவடிக்கைகளையும் முகாம் அதிகாரிகளிடமிருந்து கறந்து, தனது கோப்புக்களில் சேகரித்துக்கொண்டது குடிவரவுத்துறை அமைச்சு.

தன்னிடம் மீதமிருந்த பழங்கள், விருந்தினர்கள் கொண்டுவந்து கொடுத்த புத்தகங்கள் போன்றவற்றை, முகாமிலுள்ளவர்களுக்கு அகுனா பகிர்ந்து கொடுத்திருக்கிறான். தாஸ்தவஸ்கி எழுதிய 'மரண வீட்டுக் குறிப்புக்கள்' நாவலைப் பல நாட்களாக தனது அறையில் வைத்துப் படித்துக் கொண்டிருந்ததை அதிகாரிகள் கண்டிருக்கிறார்கள். அவன் தப்பியோடுவதற்கு முதல்நாள், அந்தப் புத்தகத்தை முகாம் நூலகத்தில் கொண்டுபோய் வைத்திருக்கிறான்.

இரண்டு நாட்களுக்கு முன்னர், தனக்குப் புதிய சப்பாத்து வேண்டுமென்று அல்பா கம்பவுண்டில் பாதுகாப்புக்கு நின்ற அதிகாரி ஒருவரிடம் ஒழுங்கு செய்து தருமாறு கேட்டிருக்கிறான். அந்த அதிகாரியும் முகாமின் அகதிகளுக்கான களஞ்சியத்திலிருந்து எடுத்துக் கொடுத்திருக்கிறார்.

இரண்டு நாட்களாக சார்ளி கம்பவுண்டின் கிழக்கு வேலிப் பக்கமாகப் புதிய சப்பாத்தை அணிந்துகொண்டு, சாவகாசமாக நடந்து திரிந்திருக்கிறான்.

எல்லாத் தகவல்களையும் புள்ளிகளாக எழுதிக் கோர்த்துப் பார்த்தபோது, அகுனாவின் திட்டம் கிட்டத்தட்ட ஒரு வாரமாக முகாமுக்குள் கச்சிதமாக முகிழ்ந்திருக்கிறது என்பது அதிகாரிகளுக்குப் புரியத் தொடங்கியது.

அவுஸ்திரேலிய அகதி முகாம்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு குடிவரவுத்துறை அமைச்சினால் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், முகாமிலிருந்து யாராவது அகதி தப்பியோடினால், பாதுபாப்பு நிறுவனமான 'ஸேடோ' குடிவரவுத்துறை அமைச்சுக்கு ஒரு லட்சம் டொலர்களுக்கு மேல் அபராதமாகச் செலுத்த வேண்டும். அவ்வளவுக்கு, முகாமிலிருக்கிற ஓர் அகதியின் இருப்புக்கும், அவனது பாதுகாப்புக்கும் மிகப் பெரிய பெறுமதியிருந்தது.

அன்றைய நாள் 'ஸேடோ' நிறுவனம், வாயிலும் வயிற்றிலும் அடிக்காத குறையாகத் தனது அதிகாரிகளை அவசர அவசரமாக அழைத்து, இந்தச் சிக்கலில் தங்களது தலை உருளாமல் எவ்வாறு தப்பிக்கலாம் என்று திட்டங்கள் போட்டது.

அகுனாவின் மனநிலை குறித்து குடிவரவுத்துறை அமைச்சு அதிகாரிகளுக்கு எத்தனையோ தடவை எடுத்துக் கூறி, அவனை மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என எவ்வளவோ அறிக்கைகள் எழுதிக் கொடுத்த போதும், அவனை முகாமில் தடுத்து வைக்கலாம் என்ற முடிவை குடிவரவுத்துறை அமைச்சு அதிகாரிகளே வலியுறுத்திக்கொண்டிருந்தார்கள்.

மருத்துவ ரீதியில்கூட, அவனது மனநிலை சிகிச்சை குறித்துப் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

அவனை உரிய உளவள மேம்பாட்டு மருத்துவ மையங்களில் சேர்ப்பித்து, குணமாக்குவதற்கு முகாம் மருத்துவர்களே யோசனை தெரிவித்தனர். அதற்கு குடிவரவுத்துறை அமைச்சின் அதிகாரிகள் கொஞ்சம் கொஞ்சம் இசைந்திருந்தனர். இறுதிக்கட்ட முடிவுகளை மேற்கொண்டு, அவனை மருத்துவமனை ஒன்றுக்கு அனுப்புவதற்குப் பேச்சுகளிலும் ஈடுபட்டிருந்தனர். அதற்குள் அவன் வேலி பாய்ந்தது, அத்தனை அதிகாரத் தரப்புகளுக்கும் கன்னத்தில் அறைந்தது போலாகிவிட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## ஆகூதாவின் சபதம்




"ஆம். ஆம்" என்றாள் மஞ்சளழகி நடுக்கத்துடன்.

"அகூதாவின் கடற்படை இன்னும் பதினைந்தே நாட்களில் இந்தத் துறைமுகத்தில் பிரவேசிக்கும்". என்று மற்றுமொருமுறை வலியுறுத்திச் சொன்னான் இளைய பல்லவன்.

"ஆம். ஆம்.

"அகூதாவின் வீரர்கள் இறங்குவார்கள். தடுக்க நானில்லா விட்டால் அடுத்து நடப்பதை...உங்கள் கதியை...தங்கத்தைப் பழிக்கும் இந்த அழகுத் தேகத்தின் நிலையை... நான் சொல்ல வேண்டுமா ?...

"இந்தச் சமயத்தில்தான், "வேண்டாம், வேண்டாம்," என்று கதறினாள் மஞ்சளழகி. இதை அடுத்துத்தான் இளையபல்லவனை அன்றைய இரவு நிகழ்ச்சிக்கு வரவும் வேண்டினாள்.

இந்தச் சம்பாஷணையும் இளையபல்லவன் முகமும் திரும்பத் திரும்பச் சித்தத்தில் வலம் வந்ததால் பிரமை பிடித்து நின்றாள் மஞ்சளழகி. அவள் எத்தனை நேரம் நின்றிருந்தாளோ அவளுக்கே தெரியாது. இளைய பல்லவன் மெல்லத் தன் கையைப் பிடித்த பின்புதான் அவளுக்குச் சுரணை வந்தது. "பயப்பட வேண்டாம். நான்தானிருக்கிறேனே!" என்று அவள் செவிகளில் கூறியது செவி மூலம் உள்ளத்துக்கும் அமுதம் வார்ப்பதாகத் தோன்றியது அவளுக்கு.

அதனால் மீண்டும் உணர்ச்சிகள் மெல்ல மெல்ல அவள் வசப்படலாயின. கடைசியாகச் சொன்ன வார்த்தைகளை அவன் அன்பொழுகச் சொன்னான். உண்மையில் இனிமை தரும் இதயத்தைப் பெற்றிருந்த இளைய பல்லவன் அவசியமானால் அதே இதயத்தை இரும்பாகவும் ஆக்கிக் கொள்ள வல்லவன் என்பதை உணர்ந்து கொண்டாளாகையால் அவன் இழுத்த இழுப்புக்கு இசையலானாள். அவளை மெல்லக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு மீண்டும் கோட்டைத் தலைவனிருந்த இடத்துக்குச் சென்ற இளையபல்லவன், அவளை அவள் ஆசனத்திலமர்த்தி விட்டுத் தானும் எதிரே உட்கார்ந்தான்.

கோட்டைத் தலைவனின் உணர்ச்சிகள் விவரணத்துக்கு உட்பட்டதாயில்லை. ஏதேதோ எண்ணங்கள் அவன் சிந்தனையில் எழுந்து உலாவிக் கொண்டிருந்தன. அந்தக் குழப்பத்தின் விளைவாக, அன்னியனொருவன் தன் மகளைக் கையைப் பிடித்து இழுத்து வந்ததையும் அவன் கவனிக்காமல், இளையபல்லவன் எதிரேயிருந்த ஆசனத்தில் அமர்ந்ததும், "இவளிடம் என்ன சொன்னீர்கள்?" என்று குழப்பத்துடனேயே கேட்டான்.

"என் முன்னேற்பாட்டைச் சொன்னேன்." என்றான் இளைய பல்லவன்.

"அதைக் கேட்டு ஏன் கதறினாள்?"

"முன்னேற்பாட்டின் விளைவை எண்ணி.

"என்ன விளைவு?"

"மகளையே கேளுங்கள்.

"கோட்டைத்தலைவன் மகளை நோக்கித் தன் கண்களைத் திருப்பினான். அவள் கண்கள் அவன் கண்களைத் தைரியமாகச் சந்தித்தன. ஆனால் அந்தத் தைரியம் அவள் வார்த்தைகளில் தொனிக்கவில்லை. அச்சமும் தைரியமும் மாறி மாறி ஒலித்த சொற்களில் நிறுத்தி நிறுத்தி, அவள் இளையபல்லவன் சொன்னதை விவரித்தாள்.

அந்த விவரணத்தைக் கேட்டதும், இடிந்து பல விநாடிகள் ஆசனத்தில் சாய்ந்துவிட்டான் கோட்டைத் தலைவன். அகூதா கொள்ளைக்காரனாயிருந்தாலும் சொன்ன சொல்லை நிறைவேற்றத் தவறாதவன் என்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. இளையபல்லவன் மீது கையை வைத்தால் அகூதா வாங்கக்கூடிய, பழியின் பயங்கரத்தையும் அவன் உணர்ந்திருந்தான். அத்தகைய பயங்கரத்தைப் பின்னணிப் பாதுகாப்பாகக் கொண்டு, தன் கோட்டைக்குள் நுழைந்து, தன் அந்தரங்க அறையில் தன்னையே மிரட்டும் இளையபல்லவனின் துணிவை எண்ணி ஒரு கணம் வியந்தான்.

மறுகணம் பயந்தான். அவன் பயத்துக்குக் காரணமும் இருந்தது. தன் கதி இருதலைக் கொள்ளி என்பதை அறிந்து தவித்தான். அந்தத் தவிப்பை வெளிக்காட்டிய கண்களை மகள் மீது. திருப்பிய கோட்டைத் தலைவன், "மகளே! இன்று நாம் நல்ல முகத்தில் விழிக்கவில்லை" என்றான்.

"ஏன்?" என்று அவள் கேட்டாள்.

"இவரை நாம் தொடவும் முடியாது. முன்னேற்பாடு அத்தனை கடுமையானது" என்று இளைய பல்லவனைச் சுட்டிக் காட்டினான்.

மஞ்சளழகி பதில் சொல்லவில்லை. ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் ஆட்டினாள்.

"இவரை எப்படியும் நாம் காக்க வேண்டும்" என்றான் கோட்டைத் தலைவன்.

"ஆம், ஆம்." பயத்துடன் பதில் சொன்னாள் மஞ்சளழகி.

"இரவு நிகழ்ச்சிக்கும் இவரை அழைத்துவிட்டாய்... "ஆம்"

"இதை அடுத்து, கோட்டைத் தலைவன் கேட்டான், "இரவு நிகழ்ச்சிக்கு அந்த நால்வரும் வருவார்களே, புரியவில்லையா உனக்கு?" என்று. மஞ்சளழகி புரிந்து கொண்டாள். அச்சம் துளிர்த்த கண்களைத் தந்தை மீது நாட்டினாள். "ஆம், புரிகிறது தந்தையே! அந்த நால்வரும் வரத்தான் வருவார்கள். இவ்ரை அழைத்தாலும் ஆபத்து, அழைக்காவிட்டாலும் ஆபத்து.

ஐயோ, இதென்ன சங்கடம்" என்று குரல் தழுதழுக்கக் கூறினாள் அவள். அத்துடன் தனது இரு கரங்களையும் குவித்து இளைய பல்லவனை வணங்கி, "வேண்டாம், இரவு நிகழ்ச்சிக்கு மட்டும் நீங்கள் வர வேண்டாம்." என்று மன்றாடினாள்.

இம்முறை குழம்பியவன் இளையபல்லவன். "யார் அந்த நால்வர்? அவர்கள் வந்தாலென்ன?" என்று குழம்பினான். அதை மெல்ல விவரிக்கத் தொடங்கினாள் மஞ்சளழகி.

### இன்பத்தில் துன்பம்

அன்றைய இரவு நிகழ்ச்சியைப் பற்றிய மர்மத்தைத் தான் உடைக்க முயன்ற சில விநாடிகளுக்குள் யாரோ நால்வரைப் பற்றிய புது மர்மமொன்று முளைத்து விட்டதையும், அதையும் நினைத்துத் தன்னையும் நினைத்து அக்ஷய முனை கோட்டைத் தலைவனும் அவன் புதல்வியும் பெரும் சஞ்சலமடைந்து தவித்ததையும் கண்ட பல்லவன் அந்தக் கோட்டையின் நிலவரம் பலவிதச் சிக்கல்களை உடையதென்பதையும், அத்தனை சிக்கல்களையும் உள் வயணங்களையும் புரிந்துகொள்ள புது மனிதன் எவனுக்கும் நாளாகுமென்பதையும் அறிந்து கொண்டான்.

அந்தச் சிக்கல்களில் மூழ்கி எழுந்து அந்த நகரத்தில் தனக்கொரு தனிஸ்தானத்தையும் செல்வாக்கையும் ஸ்தாபித்துக் கொண்ட பின்பு கலிங்கத்தின் கடல் பலத்தை உடைக்கும் இலட்சியத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதென்றால் அது சில வருடங்களுக்கு நடவாத காரியமென்பதையும் திண்ணமாகத் தெரிந்து கொண்டானாகையால் அந்த நகரத்தில் தன்னைப் பாதிக்கக்கூடிய நிகழ்ச்சிகளையும் மனிதர்களையும் மட்டும் கவனித்துக் களைந்துவிட்டுத் தன் இலட்சியப் பாதையில் நடக்க வேண்டுமேயொழிய எல்லா விவகாரங்களிலும் தான் தலையிடுவது வீண் தொல்லை என்ற முடிவுக்கும் வந்தான்.

தவிர தன்னை நேரடியாகப் பாதிக்கக்கூடிய எதிரிகளையோ நிகழ்ச்சிகளையோ சமாளிப்பதில் தாமதம் காட்டுவது தவறாகும் என்ற எண்ணமும் அவன் இதயத்தே எழுந்தது. ஆகவே அந்தச் சமயத்துக்கு அக்ஷயமுனை வரலாறு முற்றிலும் கவனம் செலுத்தாமல் எந்த நால்வர் வருகையால் தனக்கு ஆபத்து என்று மஞ்சளழகியும் அவள் தந்தையும் நினைத்தார்களோ அந்த நால்வரைப் பற்றி மட்டும் அந்தச் சமயத்தில் தெரிந்து கொண்டால் போதுமென்றும், அந்த நால்வரைச் சமாளித்துக் கொண்டு தன் பணியில் அடுத்த இரண்டு நாட்களுக்குள் இறங்குவதே தான் செய்யக்கூடிய காரியமென்பதையும் தீர்மானித்துக் கொண்ட இளைய பல்லவன், அந்த நால்வரைப் பற்றிய விபரங்களை மஞ்சளகி கூற முற்பட்டதும் மிகுந்த கவனத்துடன் அவள் சொல்வதைக் கேட்கலானான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் 9 இல் டும்.. டும்.. டும்



தனுஷின் வெண்டர்பார் பிலிம்ஸ் தயாரிப்பில் விஜய் சேதுபதி-நயன்தாரா நடிப்பில் 2015ம் ஆண்டு வெளியான திரைப்படம் நானும் ரவுடித்தான்.

விக்னேஷ் சிவன் இயக்கியிருந்த இப்படத்திற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது. காதம்பரி என்ற வேடத்திற்கு சிறந்த நாயகிக்கான விருது கூட நயன்தாரா விற்கு நிறைய கிடைத்தது.

அப்படத்தின் மூலம் விக்னேஷ் சிவன்-நயன்தாரா இருவருக்கும் ஏற்பட்ட நெருக்கம் காதலர்களாக மாறினார்கள். இப்போது வரை காதலர்களாக தான் இருக்கிறார்கள்.

நிச்சயதார்த்தம் முடிந்து விட்டதாக ஒரு தொலைக் காட்சி நிகழ்ச்சியில் நயன் தாரா கூறியிருந்தார்.

**திருமண திகதி**

ஆனால் திருமணம் எப்போது என்பது மட்டும் பிரபலங்கள் அறிவிக்கவே இல்லை. மாறாக எப்போதும் ஒன்றாக அடிக்கடி கோவில்களுக்கு மட்டும் சென்று கொண்டிருக்கிறார்கள்.

காத்து வாக்குல ரெண்டு காதல் பட ரிலீஸின் போது திருப்பதி சென்று தரிசனம் செய்தார்கள். அண்மையில் ஷீரடி சென்றுள்ளார்கள். அந்தப் புகைப்படங்களை விக்னேஷ் சிவன் தனது இன்ஸ்டாவில் பதிவு செய்திருக்கிறார்.

தற்போது என்ன தகவல் என்றால் விக்னேஷ் சிவன்-நயன்தாராவின் திருமணம் வரும் ஜூன் 9ம் திகதி என தகவல் அதிகாரப்பூர்வமாக வந்துள்ளது. அதோடு திருப்பதியில் தான் அவர்களது திருமணம்நடக்க உள்ளதாம்.

# கண்ணழகியா இது?



அன்புடன் ரஜினிகாந்த் படத்தின் மூலம் குழ ந்தை நட்சத் திரமாக அறி முகமாகி, அதன் பின் கதாநாயகியாக நடிக்க துவங்கியவர் நடிகை மீனா.

இவர் தமிழில் முதன் முதலில் வெளி வந்த ஒரு புதிய கதை படத்தின் மூலம் கதாநாயகியாக அறி முகமானார்.

இதனை தொடர்ந்து முன்னணி நடிகர்களான ரஜினி காந்த், கமல் ஹாசன், சத்யராஜ் எனப் பலருடன் பல படங்களில் இணைந்து நடிக்க தொடங்கினார்.

**சிறு வயது புகைப்படம்**

நடிகை மீனா கடந்த 2009ஆம் ஆண்டு வித்யாசாகர் என்பவரை திருமணம் செய்துகொண்டார். இவர்கள் இருவருக்கும் நைனிகா என்ற அழகிய பெண் குழந்தை உள்ளார் என்பதை நாம் அறிவோம்.

இந்நிலையில், நடிகை மீனாவின் சிறு வயது புகைப்படம் ஒன்று இணையத்தில் வெளியாகியுள்ளது. ரசிகர்கள் பலரும் பார்த்திராத அவருடைய சிறு வயது புகைப்படம் இதோ..

# விசித்திரன் - திரைவிமர்சனம்

நாயகன் ஆர்.கே சுரேஷ் பொலிஸ் கான்ஸ்டபிளாக இருந்து வீ.ஆர்.எஸ் பெற்றவர். பெரிய அதிகாரிகள் கூட கண்டுபிடிக்க முடியாத கொலைக் குற்றங்களை மிகவும் சாதாரணமாக கண்டு பிடிக்க கூடியவர். இவர் தற்போது மதுபோதைக்கு அடிமையாக இருந்து வருகிறார்.

இந்நிலையில் இவரை விட்டுப் பிரிந்து சென்ற மனைவி பூர்ணா, சாலை விபத்தில் உயிரிழக்கிறார். இது விபத்தல்ல கொலை என்று ஆர்.கே சுரேஷ் மனைவியின் மரணத்திற்கான பின்னணியை தேட ஆரம்பிக்கிறார்.

இறுதியில் மனைவி பூர்ணாவை கொலை செய்தது யார் என்பதை ஆர்.கே சுரேஷ் கண்டுபிடித்தாரா? இல்லையா? பூர்ணாவை கொலை செய்ததற்கான பின்னணி என்ன? என்பதே படத்தின்மீதிக்கதை.

படத்தில் நாயகனாக நடித்திருக்கும் ஆர்.கே சுரேஷ், கடுமையான உழைப்பைக் கொடுத்திருக்கிறார். இப்படம் அவரது நடிப்புக்கு தீனி போடும் அளவிற்கு உள்ளது. சின்ன அசைவுகளில் கூட ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து இருக்கிறார் ஆர்.கே.சுரேஷ். இவரது மனைவி யாக நடித்திருக் கும் பூர்ணா. கணவன் மீது பாசம் வைத்திருக் கும் மனைவியாக நடித்திருக்கிறார். சிறிது நேரமே வந்தாலும் மனதில் பதிந்திருக்கிறார் மதுஷாலினி. மற்ற கதாபாத்திரங்களான இளவரசு, மாரிமுத்து, ஜார்ஜ், பகவதி பெருமாள் ஆகியோரின் திரைக்கதை ஓட் டத்திற்கு பெரிதும் உதவி இருக் கிறது.

மலையாளத்தில் ஜோசப் என்ற படத்தை இயக்கிய பத்மகுமார், அதே கதையை தமிழில் விசித்திரன் என்ற பெயரில் இப்பட த்தை இயக்கி இருக்கிறார். மருந்து வத்தைச் சுற்றி நடக்கும் தொழில் களால் மனித உயிர்கள் பாதிக்கப் படுவதை திரைக்கதை மூலம் கொடுத்திருக்கிறார் இயக்குனர். உடலுறுப்புத் திருட்டை எமோஷனல் திரில்லர் பாணியில் படத்தை உருவாக்கி இருக்கிறார்கள். கதா பாத்திரங்களிடையே திறமையாக வேலை வாங்கி இருக்கிறார்.

ஜி.வி.பிரகாஷ் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். படத்திற்கு தேவையான பின்னணி இசையை கொடுத்திருக்கிறார். வெற்றிவேல் மாஹேந்திரனின் ஒளிப்பதிவு சிறப்பு.

இல்லற வாழ்வில்
வெள்ளிவிழாக் கண்ட தம்பதியரை
வாழ்த்துகிறோம்



திரு.திருமதி
அருளானந்தம் யசோதா தம்பதியினர்
(அவுஸ்திரேலியா)

இல்லறம் என்னும் நல்லறம் தன்னில்
இணைந்தே வெள்ளிவிழாக் கண்ட
அருளானந்தமொடு யசோ
உத்தமத் தம்பதியர்
எல்லா வளமும் பெற்றிடினும்
பெருமிதம் கொள்ளா பெருந்தகையர்
ஊருக்கு உழைப்பதை யோகமாய்
உற்றவர்க்கு உதவுவதை யாகமாய்
கற்றறிந்த அறிவை ஞானமாய்
தம்மகத்கே வகுத்த நெறியாய்
வாழுகின்றனர் அவர் தம் வாழ்வு இன்னும்
பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்
வாழிய வாழியவே!

வாழ்த்துவோர் :
வலம்புரி நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : அழகே உன்னை ஆராதிக்கிறேன்
இயற்றியவர் : வாலி
இசை : இளையராஜா
பாடியவர் : வாணி ஜெயராம்



நானே நானா யாரோ தானா
மெல்ல மெல்ல மாறினேனா
நானே நானா யாரோ தானா
மெல்ல மெல்ல மாறினேனா

தன்னைத்தானே மறந்தேனே
என்னை நானே கேட்கிறேன்

நானே நானா யாரோ தானா
மெல்ல மெல்ல மாறினேனா

ஒருவன் நினைவிலே...
உருகும் இதயமே இதோ துடிக்க
உலர்ந்த உதடுகள்
தனிமைக் கவிதைகள்
எதோ படிக்க.
மதுவின் மயக்கமே
உனது மடியில் இனிமேல்
இவள்தான் சரணம் சரணம்

நானே நானா யாரோ தானா

மெல்ல மெல்ல மாறினேனா
மெல்ல மெல்ல மாறினேனா

பிறையில் வளர்வதும்
பிறகு தேய்வதும் ஒரே நிலவு
உறவில் கலப்பதும்
பிரிவில் தவிப்பதும்
ஒரே மனது...
பருவ வயதிலே
இரவும் பகலும் விரகம்
நரகம் சரணம் சரணம்

நானே நானா யாரோ தானா
மெல்ல மெல்ல மாறினேனா

தன்னைத்தானே மறந்தேனே
என்னை நானே கேட்கிறேன்

நானே நானா யாரோ தானா
மெல்ல மெல்ல மாறினேனா

# இயற்கையின் தன்மையை உணர்தலே மாபெரும் தியானமாகும்

நம் இந்து தர்மத்தில் பல விதமான தியானச் சிந்தனைகள் கருத்துக்களாக, பதிவுகளாக, தத்துவங்களாக எங்கும் கொட்டிக் கிடக்கின்றன. அதை செயலாக்கமுறச் செய்வது மனித மனங்களுக்கு சில சமயங்களில் கடினமானதாகவும். சில சமயங்களில் சுலபமானதாகவும் இருக்கிறது. கடினமோ, சுலபமோ ஆனால் அதை எவரும் தன்னளவிலேனும் செயற்படுத்த ஒருபோதும் முனைவதில்லை. அதனால் தியானத்தில் இருந்து வரும் சுகத்தை இந்த கலியுகத்தில் எவரும் அறிய வாய்ப்பில்லை.


ஆனால் ஒரு சிலர் காலத்தின் இக்கட்டான சூழலினால் தங்களை அறியாமலேயே தியான சுகத்துக்குள் தங்கள் வாழ்க்கையில் தானாக வந்து வழுக்கி விழுந்து விடுகிறார் கள். அவர்கள் ஒருபோதும் அறிவதில்லை தாங்கள் தியானச் சூழலில்தான் எப்போதும் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் என்று. இருந்தும் அவர்கள் மனம் அமைதியில் எந்நேரமும் திளைத்திருக்கிறது என்பதே பெரும் உண்மையாகும்.

உண்மையில் தியானம் என்பது இயற்கையின் யதார்த்தத்தை அதன் அடிபடை உண்மை நிலையை முற்று முழுதாக புரிந்து கொள்வது அல்லது திடமாக உணர்ந்து கொள்வது. அதுவே தியானத்தின் அதி சூட்சுமமாகும்.

மனதை அடக்குவதற்கு ஆயிரம் வழிகளை ஆன்மிகம் போதிக்கலாம். ஆனால் மனதை அடக்குவதற்கு ஒரே ஒரு வழி இயற்கையின் நிலையற்ற தன்மையை புரிதல் அல்லது உணர்தல் என்று போதிக்கிறார்கள் தத்துவ ஞானிகள்.

இயற்கைக்கும் மனிதனுக்குமான போராட்டத்தில் தன் சரீரமும் இந்த இயற்கையின் ஒரு பகுதிதான் என உணர்தலும், தான் உடலல்ல, மனமல்ல, புத்தியல்ல, சித்தமல்ல நான் ஆன்மா என திடமாக நம்பிக்கையுடன் சிந்திப்பதும் இந்த இயற்கையை தோற்கடிப்பதற்கான ஒரு நுட்பமான வழிதான். இதை மேலான தியான நுட்பமாகவும் நாம் எடுத்துக் கொள்ளலாம்.

மனித வாழ்வின் சத்தியத் தன்மை என்பது இயற்கையின் அனைத்து அடிப்படை அம்சங்களின் யதார்த்தங்களைப் புரிந்து கொள்வதில்தான் பெரிதும் தங்கியுள்ளது. ஒரு பூவின் மலர்தலையும் அதன் உதிர்தலையும் அந்த இரண்டுக்கும் இடையிலான நிலையற்ற வாழ்தலையும் ஆழமாக சிந்தித்தால் பற்றற்ற தியான வியூகம் இயற்கையாகவே வந்து மனித மனதுக்கு வாய்த்து விடும்.



ஒரு ஆன்மிகத் துறவியின் இயற்கையைப் பற்றிய புரிதலை விட, கொரோனா பெரும் தொற்றுக்கு பின் சமகால சூழலில் ஒரு குடும்பத் தலைவனின் நாட்டைப் பற்றிய புரிதலே மிகவும் முக்கியமானது. அதுவும் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த இலங்கையைப் பொறுத்த மட்டில் அங்கு வாழும் குடும்பத் தலைவன் ஒருவன் எடுக்கும் ஊதியத்திற்கு ஏற்ப, தன் குடும்பச் சுமையை சுமந்து குடும்பத்தின் வரவு- செலவுகளை மிக நுட்ப மாகச் சரி பார்த்து அதற்கு தகுந்தாற் போல வாழப் பழகுவதும் ஒரு இயற்கையை உணரும் அல்லது புரியும் தியானமாகவே பார்க்கப்படும்.

ஒரு துறவிக்கு இருக்கும் ஆற்றலை விட, ஒரு உண்மையான குடும்பத் தலைவனின் ஆற்றல் அளப்பரியது எனலாம். ஏனெனில் அனைத்தையும் குடும்பத்துக்கு கொடுத்து விட்டு. உள்ளாடைக்கே வழியில்லாமல் தன்னந்தனியனாக நின்று அந்த மன திருப்தியின் சுகத்தை அனுபவிப்பது கூட, அனைத்தையும் துறந்த ஒரு ஆனந்த தியான நிலை தான்.

தியானம் என்பது வெறும் கண்ணை மூடிக் கொண்டு ஒரு இடத்தில் குந்தியிருப்பது அல்ல. அது மனித வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் இயற்கையின் பிணைப்பிலிருந்து மதிநுட்பமாய் தப்பித்துக் கொள்வதற்கான வழியைத் தேடுவதாகும். அப்படி தப்பித்தவர்கள் இந்த பிரபஞ்சத்தில் கோடியில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே. அவர்களைத்தான் நாம் சித்தர்கள், ஞானிகள், யோகிகள், மகான்கள் என்று இன்று வரை வணங்கிக் கொண்டும். போற்றிக் கொண்டும் இருக்கின்றோம்.

ஆன்மிகத்தில் இருந்து அரசியல் வரை நாம் இயற்கையின் யதார்த்தமான புரிதலை சரியான மதிநுட்பத்தில் தியானமாக உணர்ந்தால் மட்டுமே, வீட்டிலிருந்து நாட்டின் எல்லை வரை ஒரு அமைதியை அல்லது ஜனநாயகத்தை மீள் எழுச்சியுடன் கட்டியெழுப்ப முடியும். இந்தப் புரிதல்களும் மற்றும் உணர்தல்களும் மனித மனங்களுக்கு சமகாலத்தின் தேவையாகவுள்ள மாபெரும் தியானமாகும்.

**சாம்.ரமேஸ்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் சில அதிசயங்கள்



ஒரு குறிப்பிட்ட எண்ணிக் கைக்குள் இந்திய தேசத்தின் அதிசயங்களை குறுக்கி விட முடியாது. எண்ணிறைந்த ஞானிகளும் அறிவியல் அறிஞர்களும் தொழில்நுட்ப நிபுணர்களும், சிற்பக் கலைஞர்களும், ஓவிய மேதைகளும், கட்டடக் கலை விற்பன்னர்களும் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கிற தேசம் இந்தியா. வரலாற்று ரீதியாக தொன்மையான பல மரபுகளைக்கொண்டது நம் நாடு.

பரந்துபட்ட இந்தியாவின் பாரம் பரியம் மிக்க பல இடங்கள், கலைகள் தனித்துவமிக்க பெருமை பெற்றவை. அத்தனை சுலபமாக ஒரு வரையறைக்குள் இந்திய அதிசயங்களை பட்டியலிடுவது இயலாது.

எனவே மனமாச்சர்யங்களைக் கடந்து, பிற தேசத்தவரையும் மலைக்கச்செய்த சில இடங்களை மட்டும் இந்தக் கட்டுரையில் காண்போம். ஹில்மேனின் மனங்கவர்ந்த பட்டியல் இது.

உலக அதிசயங்கள் பட்டியலில் இடம்பெற்ற தாஜ்மகாலை முதல் இடத்தில் வைக்கும் ஹில்மேன் அடுத்ததாக காஷ்மீர், லடாக் பிரதேசங்கள், அமிர்தசரஸ் நகரில் உள்ள பொற்கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கோபுரங்கள், வாரணாசி, கேரள உப்பங்கழி, காஞ்சிபுரம் கோவில்கள், எல்லோரா குகைச்சிற்பங்கள், ஆக்ரா கோட்டை ஆகியவற்றைக் குறிப்படுகிறார்.

## காஷ்மீர்

பற்றி எரியும் பனிமலை என்று அரசியல் நோக்கர்களால் வர்ணிக்கப்படும் காஷ்மீர் இந்தியாவுக்கு இயற்கை வழங்கிய கொடை என்றே கூறலாம். காஷ்மீரின் அழகு அதன் வனப்பு மிக்க பள்ளத்தாக்குகள், பனி ஆறுகள், மற்றும் ஆண்டுக்கு சராசரியாக 650 மி.மீ மழை பனிப்பொழிவுகள் காரணமாக அனைவராலும் நேசிக்கப்படும் தட்பவெப்பமும் ஆகும்.

காஷ்மீர் பள்ளத்தாக்கு, செனாப் பள்ளத்தாக்கு, பூஞ்ச் பள்ளத்தாக்கு,லிடர் பள்ளத் தாக்கு, சிந்து பள்ளத்தாக்கு, தாவி பள்ளத்தாக்கு ஆகியன சில குறிப்பிட வேண்டிய பள்ளத் தாக்குகளாகும். காஷ்மீரின் பல இடங்கள் கடல் மட்டத்துக்கு பல கி.மீ உயரத்தில் இருப்பதால் ஆண்டின் பெரும்பான்மையான மாதங்கள் குளிர் உறைய வைக்கும். சான்ஸ்கார்ன் பகுதிகள் மைனஸ் 20 டிகிரி வரை செல்லும்.

இமயமலையிலிருந்து பாயும் ஜீலம் தவிர சிந்து, செனாப் ஆறுகள் செல்லும் வழியெங்கும் பல இடங்களில் எழில் கொஞ்சும் மலர்வனங்கள். இவையல்லாமல் 70 கி.மீ தூரம் செல்லும் குளிர்ச்சி தரும் சியாச்சின் பனியாறு ஆகியன மட்டுமல்லாமல் காஷ்மீரின் அழகுக்கு அழகு சேர்ப்பவை அங்கிருக்கும் வனப்புமிக்க ஏரிகள்.

ஸ்ரீநகரின் இதயப்பகுதியில் இருக்கும் தால்ஏரி, சிந்து பள்ளத் தாக்கின் சோப்பூர் மலையடிவாரத்தில் இருக்கும் மனஸ்பால் ஏரி, உலர் ஏரி, நாகின் ஏரி, கிருஷ்ணச்சார் ஏரி, அஞ்சால் ஏரி, திசொமொரிரி ஏரி, பைச்சம், துலியன் ஆகியன வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கும் ஏரிகள். வண்ண மலர்கள் பூத்து குலுங்கும் மொகல் கார்டன், குல்மார்க் மலை வாசஸ்தலம் ஆகியவையும் காஷ்மீரின் பேரெழில் அடையாளங்கள்.

(தொடரும்...)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2611

### காவியா



கண்ணீர் மட்டும் விற்பனைக்கு என்றால் ஏழைகள் தான் கோடீஸ்வரர்கள்

### துஷாந்

உலகின் மிகக் கொடுமையான அவஸ்தை என்ன தெரியுமா......?



நம்மிடம் இல்லாத ஒன்று நம் கண்முன் வந்து போவதும் வந்து நம்மை ஏக்கத்தில் கொன்றுவிட்டு போவதும்...!

### சகானா

டீச்சர்: ஒரு ஊர்ல... ஒரு வயசான பாட்டி இருந்தாங்கலாம்...



ஸ்டுடென்ட்: நீங்க சொல்றது பொய் மிஸ் ஒரு வயசுல பாட்டியே இருக்க மாட்டாங்க

### பிரேம்

குடிக்கிற தண்ணிய ப்ரிஜில வச்சது போய்...



குளிக்கிறதுக்கு தண்ணிய ப்ரிஜில வைக்கணும் போல... என்னா வெயிலு...


### வித்தியா

நின்று கவனித்தால் சிக்கலாக தெரியலாம்... பயணித்தால் பாதை இருப்பதை அறியலாம்... வாழ்க்கை



### தணிகா

விரும்பியது தகரம் என்றால் அருகில் " வைரமே" இருந்தாலும் மனம் ஏற்காது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

289

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## நிறையை குறைப்போம் என்று உறுதி எடுப்போம்

ஒருவர் அளவான உடல் நிறையை பேணுவது அவர் வாழும் காலத்தை அதிகரிக்கச் செய்வதுடன் அவரின் செயற்றிறனையும் கற்கும் திறனையும் கூட்டும் என்பது பல ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நிறையை சரியான அளவில் பேணாதவர்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், பாரிசவாதம், மூட்டு சம்பந்தமான நோய்கள், நாரி சம்பந்தமான நோய்கள், புற்று நோய்கள், மாரடைப்பு, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், மாதவிடாய் கோளாறுகள், கர்ப்பம் தரிப்பதில் தாமதம், குடும்ப வாழ்வில் ஆரோக்கிய குறைவு போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் ஆகும்.

சீனி, சர்க்கரை, பனங்கட்டி அல்லது இவை சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுகள்அல்லது பானங்கள் போன்றவற்றை சிறிதளவு உட்கொண்டாலும் பெரும் நிறை அதிகரிப்புஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. காரணம் இவற்றில் இருக்கும் கலோரி அடர்த்தி அதிகமாகும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி என்பவற்றிக்குப் பதிலாக இனிப் பூட்டிகள்.

அல்லது சுவையூட்டிகளை பயன்படுத்தலாம். இவற்றின் சுவை சீனியை ஒத்ததாக இருக்கும் ஆனால் நிறை அதிகரிப்பு எதனையும் ஏற்படுத்தாது. நீரிழிவு இல்லாதவர்களும் இதனைப் பயன்படுத்த முடியும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி போன்றவற்றுடன் ஒப்பிடும் போது இந்த இனிப் பூட்டிகள் பாதுகாப்பானவை மட்டுமல்ல நிறை அதிகரிப்பையும் ஏற்படுத்த மாட்டாது.

இதே போன்று எண்ணெய் அல்லது எண்ணெயில் பொரித்த உணவு வகைகளும், பட்டர், மாஜரின் போன்றவற்றையும் சிறிய அளவு உணவில் சேர்த்தாலும் அதிகளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தவல்லன. நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், ஒலிவ் எண்ணெய் போன்ற எண்ணெய் வகைகள் உட்பட எல்லா எண்ணெய் வகைகளும் நிறை அதிகரிப்பை ஏற்படுத்தவல்லன. மிக்சர், வடை, ரோல்ஸ் ஏனைய பொரியல் வகைகள், தேங்காய் அதிகளவு சேர்த்த உணவு வகைகள், எண்ணெய் சேர்த்து செய்யும் உணவு வகைகள் போன்றவற்றில் எண்ணெயின் வீதம் அதிகமாக இருப்பதால் இவற்றில் சிறிதளவை உட்கொண்டால் கூட பெருமளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தும்.



நிறை குறைப்பு முயற்சியில் ஈடுபடுபவர்கள் சுவைக்காகவும் பசியை போக்குவதற்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் அடிக்கடி உண்ணக் கூடிய உணவு வகைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். பழவகை குறிப்பாக கொய்யா, தோடை, அப்பிள், ஜம்பு, விளாம்பழம், பப்பாசி, வாழைப் பழம், நாவல் போன்றன. அத்துடன் எல்லா விதமான மரக்கறி வகைகள் குறிப்பாக அகத்தி, முருங்கை, கோவா, கரட், பீற்றூட், தக்காளி, முள்ளங்கி, கீரைவகை, பயற்றை, வெங்காயம், போஞ்சி, சிறகவரை, லீக்ஸ் போன்றவை. இத்துடன்பானங்களானமோர், இனிப் பூட்டிகள் சேர்த்த சீனி சேர்க்காத தேநீர், கோப்பி, பால், தேசிக்காய் தண்ணீர், குத்தரிசிக் கஞ்சி, தோடம்பழச்சாறு, இளநீர் போன்றவற்றை குறிப்பிடலாம். பால், முட்டை, மீன், இறால், தானிய வகைகள் போன்றவற்றை போதிய ளவு உணவில் சேர்த்துக் கொள்வது நன்மை பயக்கும். இவை எமக்கு அதிகளவு புரதத்தை வழங்குவதுடன் பசியை கட்டுப்படுத்தவும் உணவில் சுவையை கூட்டுவதற்கும் உறுதுணையாக இருக்கும்.

நிறை குறைப்பதில் மட்டும் கவனம் செலுத்தாது உடல் ஆரோக்கியத்துடன் நிறை குறைப்பதில் அக்கறை செலுத்த வேண்டும். இதற்கு உடற்பயிற்சி மிகவும் உறுதுணையாக அமையும். உணவு வீணாகப் போகிறதே என்ற உணர்வில் மிகுதி உணவுகளை உண்ணும் பழக்கத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பசிக்காத வேளைகளில் மிகுதி உணவை உண்டால் உடம்பு தான் வீணாகிப்போகும்.

பிறரின் வற்புறுத்தலிற்காக உணவுஉண்ணுவதையும்உணவு உண்ணுமாறு ஒருவரை வற்புறுத்துவதை ஒரு உபசார முறையாகக் கடைப்பிடிப்பதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். பசிக்காத வேளையில் ஒருவரை உண்ணுமாறு வற்புறுத்துவது அவரை நோயாளி ஆக்கும் படிமுறையாக அமைத்துவிடும். உணவு அருந்துவதற்கு 10 நிமிடங்கள் முன்னதாக பழங்களைஉண்டு அதன் பின்னர் உணவை அருந்துதல் நல்லது. இது உண்ணும்உணவின்அளவைக் குறைத்துக் கொள்ள உதவியாக இருப்பதுடன் போதுமான உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

உணவை ஆறுதலாக உண்ணப் பழக வேண்டும். இது குறைந்தளவு உணவுடன் பசியைப் போக்கவும் போதுமான அளவு உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்தவும் உதவும். சாப்பாட்டுக் கோப்பைகளையும் கரண்டிகளையும் சிறியனவாக தெரிவு செய்து வைத்திருப்பது பயன்தரும். இதன் மூலம் அளவுக்கதிகமான உணவு உட்கொள்ளப்படுவதை குறைத்துக் கொள்ள முடியும். தேநீர் கோப்பையையும் சிறியதாக தெரிவு செய்து வைத்திருப்பது நல்லது.

தினமும் ஒரே வகையான உணவு வகைகளை உண்பதிலும் பார்க்க நிறத்தாலும், சுவையாலும், வாசனையாலும் மாறுபடும் வெவ்வேறு வகையான உணவுகளை மாறி மாறி உண்பது உடலுக்கும் மனதுக்கும் ஆரோக்கியத்தையும், புத்தூக்கத்தையும் தருவதுடன் பசியைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான நிறை குறைப்பிற்கு வழிவகுக்கும். ஒரே வகையான உணவு வகைகளை உண்ணுவதன் மூலம் எல்லா வகையான சத்துக்களையும் பெற்றுக் கொள்ள முடியாது.

முயற்சிக்கும் ஊக்கத்திற்கும் பெயர் போனவர்கள், தியாகத்திற்கு சிகரம் வைத்தவர்கள், சேமிப்பிற்கும் கொடைக்கும் இலக்கணம் வகுத்தவர்கள், கல்வியில் கரை கண்டவர்கள், நினைத்த இலக்கை அடையும் வரை உழைக்கும் நெஞ்சுரம் கொண்டவர்கள் உடல் பருத்து உயிர் விடுவதா?

நிறையை குறைப்போம் என்று உறுதி எடுப்போம். அதற்கான ஆர்வத்தை விதைத்து வளர்ப்போம். உடற் பரிமாணங்களைப் பேணும் கலையை கற்றுத் தெளிவோம். இதை நடைமுறைப்படுத்திட சங்கற்பம் எடுப்போம்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org